பக்கங்கள் 21

# காலை முரசு

| முழக்கம்: 03 | வள்ளுவ ஆண்டு 2057 | ஐப்பசி 18 செவ்வாய்க்கிழமை 04.11.2025 | அதிர்வு 97 |
|---|---|---|---|

## நாளை வவுனியாவில் கூடுகின்றது தமிழரசு

இலங்கைத் தமிழரசுக் கட்சியின் விசேட மத்திய செயற்குழுக் கூட்டம் நாளை புதன்கிழமை வவுனியாவில் நடைபெறவுள்ளது. 02



# அநுர அரசை எதிர்த்து சகல எதிர்க்கட்சிகளும் ஒன்றிணைய வேண்டும்

## உதய கம்மன்பில வலியுறுத்து

"வழங்கிய வாக்குறுதிகளை நிறைவேற்றாத காரணத்தால் தான் எதிர்வரும் 21 ஆம் திகதி அநுர அரசாங்கத்துக்கு எதிராகப் பேரணியைஏற்பாடுசெய்துள்ளோம். இந்தப் பேரணியில் சகல எதிர்க் கட்சிகளும் ஒன்றிணைய வேண்டும் என்பதே எமது விருப்பம். அரசியல் கொள்கை வேறுபாட்டினால் இந்தப் பேரணியில் பங்கேற்கப் போவதில்லை என்று ஐக்கிய மக்கள் சக்தி உள்ளிட்ட சில எதிர்க்கட்சிகள் குறிப்பிடுவது தவறானது. ஏனெனில் அரசியல் கூட்டணியமைக்க நாங்கள் அழைப்பு விடுக்கவில்லை." 02

# அரசுக்கு எதிரான நுகேகொடைப் பேரணியில் மஹிந்த, ரணிலைக் களமிறக்குவதற்கு முயற்சி

நுகேகொடையில் எதிர்வரும் 21ஆம் திகதி நடைபெறவுள்ள தேசிய மக்கள் சக்தி அரசுக்கு எதிரான மக்கள் பேரணியில் முக்கிய அரசியல் புள்ளிகளைக் களமிறக்குவதற்குரிய முயற்சி எடுக்கப்பட்டு வருகின்றது.

முன்னாள் ஜனாதிபதிகளான மஹிந்த ராஜபக்ஷ, மைத்திரிபால சிறிசேன, ரணில் விக்கிரமசிங்க, கோட்டாபய ராஜபக்ஷ மற்றும் முன்னாள் பிரதமர் தினேஷ் குணவர்தன ஆகியோரை களமிறக்குவதற்குரிய அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

மேற்படி பேரணியில் ஐக்கிய தேசியக் கட்சி, சுதந்திரக் கட்சி மற்றும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி என்பன 02






2024ஆம் ஆண்டின் மக்கள் தொகை மற்றும் வீட்டு வசதிக் கணக்கெடுப்பு சில ஆச்சரியமான தரவுகளை தந்து இருப்பதாக கொழும்பு ஊடகங்கள் செய்தி வெளியிடுகின்றன.

வடக்கு, கிழக்கைப் பூர்வீகமாகக் கொண்ட இலங்கைத் தமிழர்களின் எண்ணிக்கை பெரு வீழ்ச்சி கண்டிருக்கும் என்பது குறித்து நாங்கள் எல்லோரும் கவலையுடன் பேசிக் கொண்டிருக்க, புள்ளி விவரங்கள் வேறு விதமான தகவல்களைத் தந்து நிற்கின்றன.

2012இல் 8 லட்சத்து 39 ஆயிரத்து 504 ஆக இருந்த மலையகத் தமிழர்களின் எண்ணிக்கை 2024 இல் 6 லட்சத்து 360 ஆக வீழ்ச்சி அடைந்திருப்பதாக 02

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்-Bonding Tamils Globally

# முதலாம் பக்கத் தொடர்ச்சிகள்

**இரகசியம் பரகசியம்...**

புள்ளி விவரம் தெரிவிக்கின்றது.

அதாவது 2012 இல் மொத்த ஜனத்தொகையில் 4.2 வீதமாக இருந்த மலையக மக்களின் தொகை 2024இல் 2.8 வீதமாகக் குறைந்துவிட்டது.

ஆனால் இலங்கை தமிழர்களின் ஜனத்தொகை எண்ணிக்கை 2012 இல் 11.2 வீதமாக இருந்தது. அது 2024 இல் 12.3 வீதமாக உயர்ந்துள்ளது.

யுத்தத்தின் பின்னர் இலங்கைத் தமிழர்கள் பெரும் எண்ணிக்கையில் நாட்டைவிட்டு வெளியேறி வரும் சூழலில், இது எப்படி சாத்தியமாயிற்று என்று பலரும் கேள்வி எழுப்பக்கூடும்.

மலையகத் தமிழர்கள் பலர் மலையகம், வடக்கு, கிழக்கு என்று பிரிக்காமல் தங்களை 'இலங்கைத் தமிழர்கள்' என்று பதிவு செய்தமையால் மலையகத் தமிழர்களின் வீதம் குறைந்து, இலங்கைத் தமிழர்களின் எண்ணிக்கை அதிகரித்திருக்கக் கூடும் என்று சில தரப்புகள் குறிப்பிடுகின்றன.

சிங்களவர்களின் எண்ணிக்கையும் 2012 இல் 74.9 வீதமாகக் இருந்து 2024 இல் 74.1வீதமாக விழுந்துள்ளது

முஸ்லிம்கள் மற்றும் மூர் இனத்தவர்களின் எண்ணிக்கை மட்டும் 2012 இல் 9.2 வீதமாகக் இருந்து 2024 இல் 10.5 வீதமாக உயர்ந்துள்ளது.

நாட்டின் ஒட்டு மொத்த மக்கள்தொகையின் வளர்ச்சி வீதத்தை விட, முஸ்லிம்களின் வளர்ச்சி வீதம் மட்டும் மூன்று மடங்கு அதிகம் என்று இந்தப் புள்ளி விவரங்கள் தெரிவிக்கின்றன.

நாட்டின் 25 மாவட்டங்களிலும் முஸ்லிம்கள் அல்லது மூர் இனத்தவர்களின் எண்ணிக்கை வீதம் உயர்ந்துள்ளது. மன்னார் மாவட்டத்தைப் பொறுத்தவரை 2012 இல் 16.5 வீதமாக இருந்த அவர்களின் எண்ணிக்கை 2024 இல் 26.5 வீதமாக அதிகரித்துள்ளது.

இந்த புள்ளி விவர மாற்றங்கள் உட்கிடையாக பல அரசியல் செய்திகளை நமக்குச் சொல்லுகின்றன என்பதை நாங்கள் மறந்து விடக்கூடாது.

* * *

போதைப் பொருள் அச்சுறுத்தலை ஒழிப்பதற்கான தேசிய வேலை திட்டத்தை கடந்த வியாழக்கிழமை கொழும்பில் சுகததாஸ உள்ளரங்கில் ஓர் உயர்மட்ட நிகழ்வில் ஜனாதிபதி அநுரகுமார திஸநாயக்கா ஆரம்பித்து வைத்தார்.

அங்கு நாட்டு மக்களுக்கு உரையாற்றிய ஜனாதிபதி, தமது பேச்சில் போதைப் பொருள் எதிர்ப்பு நடவடிக்கைகள் மற்றும் திட்டங்கள் தொடர்பில் முழு ஆதரவையும் வழங்குமாறு ஊடகங்களைப் பகிரங்கமாகக் கேட்டுக் கொண்டார்.

ஆனால், இதில் வேடிக்கை என்னவென்றால், அந்தத் தேசிய திட்டம் தொடர்பான நிகழ்வு குறித்து செய்தி சேகரிக்கும் பணியில் ஈடுபட்ட ஊடகவியலாளர்களுக்கும் படப்பிடிப்பாளர்களுக்கும் அங்கு இடமோ அனுமதியோ அளிக்கப்படவே இல்லை என்பதுதான்.

இந்த நிகழ்வில் பார்வையாளராகப் பங்குபற்றுவதற்கு பத்திரிகைகளின் ஆசிரியர்கள் அழைக்கப்பட்டிருந்தார்கள். ஆனால் செய்தியாளர்களுக்கோ படப்பிடிப்பாளர்களுக்கோ அங்கு இடம் அளிக்கப்படவே இல்லை. செய்தியாளர்களையும் படப்பிடிப்பாளர்களையும் புறமொதுக்கிக் கொண்டு இந்தத் திட்டத்திற்கு எவ்வாறு ஊடகங்களின் ஆதரவை ஜனாதிபதி பெறப்போகின்றார் என்பது புரியவில்லை.

இத்தகைய பொறுப்பற்ற போக்கு, இந்த நிகழ்வுக்கு மாத்திரமானது என்பது அல்ல. பொதுவாகவே அரசின் பல நிகழ்வுகளில் இத்தகைய 'கோணங்கித்தனம்' தொடர்ந்து அரங்கேறுவது சகஜமாக உள்ளது. கொழும்பில் என்று மாத்திரமல்ல, வடக்கில் யாழ்ப்பாணத்தில் கூட அதிகார வர்க்கம் அப்படித்தான் நடந்து கொள்கின்றது. ஜனநாயகத்தின் நான்காவது தூண் என்று கருதப்படும் ஊடகங்களைத் துச்சமாக மதித்துப் புறமொதுக்கும் அதிகாரத்தனம் இருக்கும் வரை ஊடகங்களின் ஒத்துழைப்பை பெற்று, இலக்கை அடைவது என்பது பொதுவாக சாத்தியப்படக்கூடியது அல்ல. அதிகார வர்க்கம் தன்னைத் திருத்திக் கொள்வது நல்லது.

---

**அரசுக்கு எதிரான...**

பங்கேற்றாலும் அந்தக் கட்சிகளின் தலைவர்கள் பங்கேற்பார்களா என்பது பற்றி அறிவிப்பு வெளியாகவில்லை.

இந்நிலையிலேயே கூட்டத்தில் உரையாற்றாவிட்டாலும், வந்து அமர்ந்திருக்குமாறு இவர்களுக்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது எனத் தெரியவருகின்றது.

நுகேகொடை பேரணியில் பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தி பங்கேற்காது என்பதால் அந்தப் பேரணியில் முக்கியத்துவம் குறையக்கூடாது என்பதற்காகவே இந்த நகர்வு முன்னெடுக்கப்படுகின்றது.

எனினும், மேற்படி தலைவர்கள் பங்கேற்பார்களா என்பது பற்றி இன்னும் அதிகாரபூர்வ தகவல் வெளியாகவில்லை.

---

**நாளை வவுனியாவில்...**

கட்சித் தலைவர் சி.வி.கே. சிவஞானம் தலைமையில் நடைபெறவுள்ள இந்தக் கூட்டத்தில் கட்டாயம் பங்கேற்குமாறு மத்திய குழுவின் அனைத்து உறுப்பினர்களுக்கும் அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

2026 ஆம் ஆண்டுக்கான வரவு – செலவுத் திட்டம், மாகாண சபைத் தேர்தல், அரசியல் தீர்வை வென்றெடுப்பதற்குரிய நகர்வுகள் உட்பட முக்கிய பல விடயங்கள் தொடர்பில் இதன்போது கலந்துரையாடப்படவுள்ளன.

அதேவேளை, இலங்கைத் தமிழரசுக் கட்சிக்கும், தேசிய மக்கள் சக்தி அரசுக்கும் இடையில் விரைவில் சந்திப்பு இடம்பெறவுள்ளது எனத் தகவல் வெளியாகியுள்ளது.

---

**அநுர அரசை...**

– இவ்வாறு பிவிதுறு ஹெல உறுமய கட்சியின் தலைவரும் முன்னாள் அமைச்சருமான உதய கம்மன்பில தெரிவித்தார்.

கொழும்பில் உள்ள பிவிதுறு ஹெல உறுமய கட்சி காரியாலயத்தில் நேற்று திங்கட்கிழமை நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின்போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:-

"பொலிஸ் சேவையில் கீழ் நிலையில் உள்ள ஒருவர் பொலிஸ்மா அதிபராக நியமிக்கப்பட்டால், பதவி நிலையில் சிரேஷ்டத்துவத்தில் இருப்பவர்கள் முரண்படுவார்கள். பொலிஸ்மா அதிபருக்கும், சிரேஷ்ட பொலிஸ்மா அதிபர்களுக்கும் இடையில் முரண்பாடுகள் தோற்றம் பெறும். பனிப்போர் நிலவும். கடந்த காலங்களிலும் இவ்வாறான நிலை காணப்பட்டது.

சிரேஷ்ட பொலிஸ் அதிகாரிகளுக்கு இடையிலான முரண்பாட்டை ஊடகங்களுக்குக் குறிப்பிடுவதை பொலிஸ்மா அதிபர் தவிர்த்துக்கொள்ள வேண்டும். பொலிஸ்மா அதிபரின் செயற்பாடுகள் வெறுக்கத்தக்கவை. அரசாங்கத்தின் அரசியல் நிகழ்ச்சி நிரலுக்கு அமைய செயற்படும் போது இவ்வாறான நெருக்கடிகள் ஏற்படும்.

அரசாங்கத்தின் சர்வாதிகார செயற்பாடு மற்றும் போலியான வாக்குறுதிகளுக்கு எதிராக எதிர்வரும் 21 ஆம் திகதி மாபெரும் பேரணியை ஏற்பாடு செய்துள்ளோம்.

ஒருசில எதிர்க்கட்சிகள் இந்தப் பேரணியில் பங்கேற்கப் போவதில்லை. இருப்பினும் இந்தப் பேரணிக்கு வாழ்த்துத் தெரிவிப்பதாகக் குறிப்பிட்டுள்ளன. ஒரு எதிர்க்கட்சி மாத்திரம் இந்தப் பேரணிக்குக் கடும் எதிர்ப்பை வெளிப்படுத்தியுள்ளது.

மக்களுக்கு வழங்கிய வாக்குறுதிகளை நிறைவேற்றாத காரணத்தால் தான் எதிர்வரும் 21 ஆம் திகதி அநுர அரசாங்கத்துக்கு எதிராகப் பேரணியை ஏற்பாடு செய்துள்ளோம்.

அரசியல் கொள்கை வேறுபாட்டினால் இந்தப் பேரணியில் பங்கேற்கப் போவதில்லை என்று ஐக்கிய மக்கள் சக்தி உள்ளிட்ட எதிர்க்கட்சிகள் குறிப்பிடுவது தவறானது. ஏனெனில் அரசியல் கூட்டணியமைக்க நாங்கள் அழைப்பு விடுக்கவில்லை என்பதை எதிர்க்கட்சிகள் முதலில் விளங்கிக்கொள்ள வேண்டும்.

அரசாங்கத்துக்கு எதிரான பேரணியில் சகல எதிர்க்கட்சிகளும் ஒன்றிணைய வேண்டும் என்பதே எமது விருப்பம்."

– என்றார்.


**வட மாகாண மரநடுகை மாதம்**
**கார்த்திகை-2025**

"ஒரு மனிதன் தனக்காக இல்லாவிட்டாலும் தனது எதிர்கால சந்ததியினருக்காக மரங்களை நாட்டவேண்டும்."

*– அலெக்சான்டர் சிமித் (ஸ்கொட்லாந்துக் கவிஞர்)*





# யாழில் பஸ்ஸுக்காகக் காத்திருந்த பெண் சிப்பாயின் கைப்பையைத் திருடியவர் ஐஸ் போதையுடன் கைது!

யாழ்ப்பாணம் மத்திய பஸ் நிலையத்தில் பஸ்ஸ/க்காகக் காத்திருந்த இராணுவப் பெண் சிப்பாய் ஒருவரின் கைப்பையைத் திருடிய சந்தேகநபரை ஐஸ் போதைப்பொருளுடன் பொலிஸார் கைது செய்துள்ளனர்.


பஸ்ஸுக்காகப் பெண் சிப்பாய் காத்திருந்த வேளை அவரது கைப்பையைத் திருடிக்கொண்டு சந்தேகநபர் தப்பியோடியுள்ளார்.

கைப்பையினுள் ஒரு பவுண் நகை, பணம் மற்றும் முக்கிய ஆவணங்கள் காணப்பட்ட நிலையில், அது தொடர்பில் அந்தப் பெண் சிப்பாய் யாழ்ப்பாணம் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளார்.

முறைப்பாட்டின் பிரகாரம் விசாரணைகளை முன்னெடுத்த பொலிஸார் சந்தேகநபர் கொடிகாமம் பகுதியில் பதுங்கியிருக்கின்றார் என்று கிடைத்த இரகசியத் தகவலுக்கு அமைய சம்பவ இடத்துக்கு விரைந்த பொலிஸ் குழு சந்தேகநபரைக் கைது செய்துள்ளனர்.

சந்தேகநபரைக் கைது செய்த வேளை அவரது உடைமையில் இருந்து ஐஸ் போதைப்பொருளையும் பொலிஸார் மீட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்ட நபரை யாழ்ப்பாணம் பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைத்துப் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.



# பருத்தித்துறையில் நாளை சுனாமி அனர்த்த ஒத்திகை

பருத்தித்துறையில் நாளை புதன் கிழமை சுனாமி அனர்த்த வெளியேற்றுகை ஒத்திகை இடம்பெற உள்ளதாகவும் மக்கள் அநாவசியமாக பதற்றமடைய வேண்டாம் எனவும் பிரதேச செயலாளர் ந.திருலிங்கநாதன் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

"உலகளாவிய ஒருங்கிணைந்த சுனாமி அனர்த்த வெளியேற்றுகை ஒத்திகை நிகழ்வு நாளை புதன் கிழமை இடம்பெற உள்ளது. சர்வதேச ரீதியாக இலங்கை உட்பட 28 நாடுகளில் கரையோர மாவட்டங்களில் இச் செயற்பாடு முன்னெடுக்கப்பட உள்ளது. இலங்கையில் மாத்தறை, களுத்துறை, மட்டக்களப்பு மற்றும் யாழ்ப்பாணம் ஆகிய நான்கு மாவட்டங்களில் நடைபெற உள்ளது.

அந்தவகையில், யாழ்ப்பாணத்தில் வடமராட்சி வடக்கு பிரதேச செயலாளர் பிரிவில் ஜே/401 பருத்தித்துறை சுப்பர்மடம் கிராமத்தில் நடைபெற உள்ளது. இது தொடர்பில் ஏற்கனவே கிராமசேவை உத்தியோகத்தரால் அறிவிக்கப்பட்ட பொதுமக்கள் மற்றும் யாழ்ப்பாணம் மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலை மாணவர்கள் ஆகிய இரு பகுதியினரையும் பாதுகாப்பாக வெளியேற்றி யாழ்ப்பாணம் வட இந்து மகளிர் கல்லூரியில் தங்க வைப்பதற்கான வெளியேற்று ஒத்திகை நிகழ்வு நடைபெற உள்ளது.

இது பொதுமக்கள் மற்றும் பாடசாலை மாணவர்களுக்கான ஒரு முன்னாயத்த ஒத்திகைக்கான பயிற்சி என்பதால், இந்த பயிற்சி நடைபெறும் தினத்தில் பொதுமக்கள், பெற்றோர் எவரும் பீதியோ குழப்பமோ அடைய வேண்டாம்." என தெரிவித்தார்.





# செல்வம் எம்.பியின் வாகனத்தில் திடீர் தீப் பரவல்

**(வவுனியா நிருபர்)**

வன்னி நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதனின் வாகனத்தில் திடீர் தீப் பரவல் சம்பவம் ஒன்று நேற்று முன்தினம் மாலை வவுனியா, பட்டானிச்சி புளியங்குளம் இடம்பெற்றுள்ளது.

ஜனநாயக தமிழ் தேசியக் கூட்டணியின் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும், ரெலோ அமைப்பின் தலைவருமான செல்வம் அடைக்கலநாதனின் வாகனம் மன்னார் வீதியில் பயணித்த போது வவுனியா, பட்டானிச்சி புளியங்குளம் பகுதியில் வாகனத்தில் மின்சார சீரின்மை காரணமாக தீப் பரவல் ஏற்பட்டது எனக் கூறப்பட்டது.

இதனையடுத்து வாகன சாரதியும், அப் பகுதியில் நின்றவர்களும் துரிதமாக செயற்பட்டு தீயைக் கட்டுக்குள் கொண்டு வந்தனர்.

இச் சம்பவத்தின் போது வாகனத்தில் நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் பயணிக்கவில்லை.

# கெஹெலியவின் குடும்பத்தினர் தாக்கல் செய்த மனுக்கள் தள்ளுபடி



முன்னாள் அமைச்சர் கெஹெலிய ரம்புக்வெல்லவின் குடும்ப உறுப்பினர்களுக்கு சொந்தமான சொத்துக்களை முடக்குவதற்கு கொழும்பு மேல் நீதிமன்றத்தினால் பிறப்பிக்கப்பட்டிருந்த உத்தரவை இரத்து செய்து ரிட் கட்டளையை பிறப்பிக்குமாறு கோரி தாக்கல் செய்யப்பட்டுள்ள 03 மனுக்களையும் தள்ளுபடி செய்து உயர் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

கெஹெலிய ரம்புக்வெல்லவின் குடும்ப உறுப்பினர்களால் இந்த மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டிருந்தன.

மேற்படி மனுக்களுடன் தொடர்புடைய அடிப்படை விடயங்களை ஆராய்ந்த ஜனக் டி சில்வா தலைமையிலான மூவரடங்கிய உயர் நீதிமன்ற நீதியரசர்கள் குழாத்தினால் இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

லஞ்ச, ஊழல் விசாரணை ஆணைக் குழுவினால் முன்னெடுக்கப்படும் விசாரணைகளுக்கமைய அவர்களின் சொத்துக்களை முடக்குமாறு மேல் நீதிமன்றம் உத்தரவிட்டிருந்தது.

# இணுவில் அறிவாலயத்தில் முழு நிலாக் கலையரங்கம்

இணுவில் அறிவாலயத்தில் நாளை (05) புதன் கிழமை மாலை 5 மணியளவில் இணுவில் அறிவாலய மண்டபத்தில் முழு நிலாக் கலையரங்கம் இடம்பெறவுள்ளது.

சிறுவர்கள் பங்கு கொள்ளும் சிறப்புப் பண்ணிசைப் பாடல்கள் மற்றும் கதாப் பிரசங்க நிகழ்வுகள் இதில் இடம்பெறவுள்ளன.

அத்துடன் விருது பெற்றவர்களுக்கான கௌரவிப்பு நிகழ்வும், செம்முகம் ஆற்றுகைக் குழுவின் க.சீலனின் இயக்கத்தில் “வேலை” குறு நாடகமும் இடம்பெறும்.

பிரித்தானியா அறிவு அறக்கட்டளையின் அனுசரணையில் இந்த நிகழ்வு நடைபெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# நமது கருத்து

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்

259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com


## தாமதமாகும் அகழும் பணி

செம்மணி மனிதப் புதைகுழி விவகாரத்தில் எது நடைபெறலாம் என்று இந்தப் பத்தியில் திரும்பத் திரும்பச் சுட்டிக் காட்டினோமோ அதுதான் நடந்திருக்கின்றது.

மழைக் காலம் நெருங்குவதால் செம்மணிப் புதைகுழி அகழும் பணிகளை விரைந்து செய்ய வேண்டும், அதற்கான நிதி ஒதுக்கீடுகளை தாமதமின்றி அரசு வழங்க வேண்டும், தாமதிக்கும் ஒவ்வொரு வாரமும் அப் பணி பல மாதங்களுக்குத் தள்ளிப் போடுவதற்கு ஏதுவாகிவிடும் என்பதை நேரத்துடனேயே இப்பத்தியில் சுட்டிக் காட்டி வந்தோம்.

செம்மணி மனிதப் புதைகுழிகளில் இருந்து தோண்ட தோண்ட எலும்புக்கூடுகள் வெளிவந்து கொண்டிருக்கின்றன. படுகொலை செய்யப்பட்டு சட்டவிரோதமான முறையில் புதைக்கப்பட்டனர் எனக் கூறப்படும் 240 பேரின் சடலங்கள் அடுத்தடுத்து வெளிவந்த நிலையில், அந்த விடயத்தையொட்டி உள்நாட்டிலும் சர்வதேசத்திலும் இலங்கை அதிகார பீடத்திற்கு எதிரான உணர்வெழுச்சி பீறிட்டு எழுந்த சூழலில் குறைந்த பட்சம் அவ்வாறு எலும்புக்கூடுகள் வெளிப்படுகின்ற வேகத்தைத் தடுத்து மந்தப்படுத்த வேண்டிய கட்டாயம் தென்னிலங்கை ஆட்சி அதிகாரத்துக்கு இருந்தது என்பதைச் சுட்டிக்காட்டி வந்தோம்.

இலங்கையில் பல சமயங்களில் அரசியல் நோக்கங்களை அடைவதற்கு நிதி மூலம் என்ற இணைப்பை வெட்டி விடுவதுதான் வழமையான பாணியாக - தந்திரோபாயமாக - இருந்து வருகிறது.

உள்ளூராட்சித் தேர்தலை குறிப்பிட்ட காலத்தில் நடத்த வேண்டும் என்பது அரசமைப்பு ரீதியான கட்டாயமாக இருந்த போதிலும், நிதி மூலம் என்ற இணைப்பை வெட்டி விட்டதன் மூலம் தேர்தலை நடத்தாமல் வெற்றிகரமாக இழுத்தடித்தார் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க.

அதேபோல செம்மணிப் புதைகுழியில் இருந்து அடுத்தடுத்து தினசரி டசின் கணக்கில் எலும்புக் கூடுகள் வெளிப்படுகின்றமையால் ஏற்பட்ட நெருக்கடியைத் தடுப்பதற்கும் நிதி விவகாரத்தையே தென்னிலங்கை ஆட்சிப் பீடம் பயன்படுத்தும் என்பதைக் கோடி காட்டி இருந்தோம்.

போதிய நிதி வந்து சேரவில்லை என்ற காரணத்தினால் அகழும் பணியை நீதித்துறை முன்னெடுக்க முடியாத நெருக்கடி ஏற்பட்டது. தாமதமாக வந்த நிதி மழை வெள்ளத்தோடு சேர்ந்து நிரந்தர தாமதத்தை ஏற்படுத்தி விட்டது.

இனி என்ன? தைப்பொங்கலுக்கு பின்னர்தான் கூடி நிலைமையை ஆராய்வார்கள். அப்போதும் கூட மழை விட்டும் தூவானம் ஓயாதமை போல, வெள்ளம் மட்டும் தொடர்ந்து தொல்லை தரும். மேலும் இரண்டு, மூன்று மாதங்கள் கடந்துதான் அகழும் பணியை ஆரம்பிக்க முடியும். அதுவரையும் அப்பிரதேசத்தை காவல் போடுவதுடன் காலத்தை இழுத்தடிக்க வேண்டியதுதான்.

நிதி மூலத்தை வெட்டியதன் மூலம், உடனடியாக ஏற்படக் கூடிய நெருக்குவாரங்களை - அழுத்தங்களை - அரசியல் குழப்பங்களை - தென்னிலங்கை சமாளித்து விட்டதாக ஆறுதலாகப் பெருமூச்சு விட முடியும்.

ஆயினும் செம்மணி புதைக்குழி என்ற பெரும் சாட்சியம் காலம் கடந்தேனும் தென்னிலங்கைக்கு பெரும் ஆப்பாக இறங்குவதை கொழும்பால் தடுக்க முடியாமல் தான் இருக்கும்.




# வவுனியாவில் மரணித்த பல்கலைக்கழக மாணவனின் உடற்கூற்று மாதிரிகள் கொழும்புக்கு அனுப்பி வைப்பு

(கி.வசந்தன்)

வவுனியா பல்கலைக்கழகத்தில் மரணமடைந்த மாணவனின் உடற்கூற்று மாதிரிகள் கொழும்புக்கு அனுப்பி வைக்கப் பட்டுள்ளன என திடீர் மரண விசாரணை அதிகாரி லா.சுரேந்திரசேகரன் நேற்றுத் தெரிவித்தார்.

கடந்த வெள்ளிக்கிழமை வவுனியா பல்கலைக்கழத்தில் மாணவர்களின் மது விருந்து நீண்ட நேரம் இடம்பெற்ற பின்புலத்தில் சனிக்கிழமை காலை வவுனியாப் பல்கலைக்கழகத்தில் தகவல் தொழில்நுட்ப பீடத்தில் முதலாம் ஆண்டில் கல்வி பயிலும் மாணவர் ஒருவர் மரண மடைந்த நிலையில் பூவரசன்குளம் வைத் தியசாலையில் சேர்க்கப்பட்டிருந்தார்.

இவ்வாறு உயிரிழந்தவர், அநுராதபுரம் ஜயசிறிபுர பகுதியைச் சேர்ந்த 23 வய துடைய மாணவர் ஆவார். மாணவனுக்கு பகிடிவதையின் போது வலுக்கட்டாயமாக மதுபானம் பருக்கியதால் மரணமடைந் துள்ளார் என மாணவனின் உறவினர்கள் குற்றம் சாட்டியிருந்தனர்.

இந்த விடயம் தொடர்பில பூவரசன் குளம் பொலிஸார் தீவிர விசாரணைகளை முன்னெடுத்து இருந்தமையுடன், திடீர் மரண விசாரணை அதிகாரி லா.சுரேந் திரசேகரனும் சம்பவ இடத்திற்கு சென்று விசாரணைகளை மேற்கொண்டார்.

அதன் பின் இளைஞனின் சடலம் உடற் கூற்று பரிசோதனைக்காக வவுனியா வைத்தியசாலையில் ஒப்படைக்கப் பட்டது. வவுனியா வைத்தியசாலை சட்ட வைத்திய அதிகாரி முன்னிலை யில் உடற்கூற்று பரிசோதனைகள் இடம்பெற்றன. இளைஞனின் மரணத் திற்கான காரணம் முழுமையாகக் கண்டறி யப்படாத நிலையில் அவரது இரத்த மற்றும் உடற்கூற்று மாதிரிகள் மேல திக பரிசேதனைக்காக கொழும்புக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

இதேவேளை, மாணவர் உயிரிழந்த போது, அவரது உடலில் கணிசமான அளவு மதுபான செறிவு இருந்திருக்க லாம் எனச் சந்தேகிப்பதாகவும் பொலி ஸார் குறிப்பிடுகின்றனர். அத்துடன் விசாரணையின் போது, உயிரிழந்த மாணவரின் சகோதரி, கடந்த 31ஆம் திகதி இரவு பல்கலைக்கழக மாண வர்களின் விருந்தொன்றில் சிரேஷ்ட மாணவர்கள் தனது சகோதரருக்கு பலவந்தமாக மதுபானம் வழங்கினர் எனக் குறிப்பிட்டுள்ளார்.

தனது சகோதரனுக்கு வேறு எந்த நோயும் இருந்திருக்கவில்லை என்றும், பல்கலைக்கழகத்தில் இடம்பெறும் பகிடிவதை குறித்து பல தடவைகள் குடும்ப உறுப்பினர்களுக்குவர் தகவல் தெரி வித்தார் எனவும் அவர் கூறியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# மட்டு. கருவப்பங்கேணி, திருப்பெருந்துறைப் பிரதேசத்தில் ஐஸ் போதைப்பொருள், கசிப்புடன் இரு வர்த்தகர்கள் கைது!



(கனகராசா சரவணன்)

மட்டக்களப்பு தலைமையகப் பொலிஸ் பிரிவிலுள்ள கருவப்பங்கேணி மற்றும் திருப்பெருந்துறை பகுதிகளில் போதைப் பொருள் மற்றும் கசிப்பு வியாபாரத்தில் ஈடுபட்டவர்கள் எனச் சந்தேகிக்கப்படு வோரின் வீடுகளை முற்றுகையிட்ட பொலிஸார் பிரபல போதைப்பொருள் வியாபாரி ஒருவரை 5 கிராம் 650 மில்லிக் கிராம் ஐஸ் போதை பொருளுடனும் 24 போத்தல் கசிப்புடன் ஒருவரையும் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை இரவு கைது செய்துள்ளனர். பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி பிரியந்த பண்டார இத்தகவலைத் தெரிவித்தார்.

பொலிஸாருக்குக் கிடைத்த தகவல் ஒன்றை அடுத்து மட்டு. தலைமையகப் பொலிஸ் நிலைய ஊழல் மற்றும் போதை ஒழிப்பு பிரிவு பொறுப்பதிகாரி பொலிஸ் இன்ஸ்பெக்டர் பிரபாத் பெர்ணான்டோ தலைமையிலான பொலிஸார் ஞாயிற்றுக் கிழமை இரவு கருவப்பங்கேணி பகுதியி லுள்ள போதை பொருள் விற்பனையில் ஈடுபட்டு வரும் பிரபல போதை பொருள் வியாபாரியின் வீட்டை முற்றுகையிட்டனர்.

இதன்போது 34 வயதுடைய அந்த வியாபாரியை 5 கிராம் 650 மில்லிக் கிராம் ஐஸ் போதை பொருளுடன் கைது செய்த போது அங்கு பெண்கள் உட்பட சிலர் ஒன்றிணைந்து கைது செய்தவரை கொண்டு செல்ல விடாது பொலிஸாரைத் தடுத்து பெரும் வாக்குவாதத்தில் ஈடுபட்ட னர். அவரை அங்கிருந்த பொலிஸார் மீட்டெடுத்துக் கொண்டு சென்றனர்.

அதேவேளை திருப்பெருந்துறையை பகுதியில் கசிப்பு விற்பனை நிலை யத்தை முற்றுகையிட்ட போது அங்கு கசிப்பு வியாபரத்தில் ஈடுபட்டுக் கொண்டி ருந்த 56 வயதுடைய ஒருவரை 24 போத்தல் கசிப்புடன் கைது செய்தனர்.

இதில் கைது செய்யப்பட்ட போதை பொருள் வியாபாரியை பொலிஸ் தடுப்புக் காவலில் வைத்து விசாரணை செய்வ தற்காக நீதிமன்ற அனுமதியை பெறுவ தற்கான நடவடிக்கையில் தாங்கள் ஈடுபட்டு வருகின்றனர் எனவும், கசிப்புடன் கைது செய்தவரை நீதிமன்றில் ஆஜர்படுத்த நடவடிக்கை முன்னெடுத்துள்ளனர் எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

# நிந்தவூர் பிரதேச சபையின் தவிசாளரின் பதவி பறிப்பு!


இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

பகுதி IV(ஆ) - உள்ளூராட்சி

உள்ளூர் அதிகார சபைகள் தேர்தல்கள் கட்டளைச் சட்ட அறிவித்தல்கள்



**(பாறுக் ஷிஹான்)**

நிந்தவூர் பிரதேச சபையின் உறுப்பினரான ஆதம்பாவா அஸ்பர் அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் கட்சியின் உறுப்பினர் பதவியில் இருந்து நீக்கப்பட்டுள்ளார் என வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்பட்டுள்ளது.

இதற்கு அமைய ஆதம்பாவா அஸ்வர் வகித்து வந்த நிந்தவூர் பிரதேச சபையின் உறுப்பினர் பதவியை இழந்துள்ளார் என நிந்தவூர் பிரதேச சபைக்கான தெளிவத்தாட்சி அலுவலர் கசுன் ஸ்ரீநாத் அத்தநாயக்க வர்த்தமானி அறிவித்தல் மூலம் பிரகடனப்படுத்தியுள்ளார்.

இது குறித்த வர்த்தமானி அறிவித்தலுக்கான பிரகடனத்தில் நிந்தவூர் பிரதேச சபைக்கான தெரிவித்தாட்சி அலுவலர் கடந்த 24ஆம் தேதி ஒப்பமிட்டு வெளிப்படுத்தியுள்ளமை குறிப்பிடத்தக்கது.




# வவுனியா புளியங்குளம் – பரசங்குளம் வீதி காப்பற் பாதையாக்கும் பணி தொடங்கியது





**(கி.வசந்தன்)**

வவுனியா, புளியங்குளம் – பரசங்குளம் புதிய வீட்டுத்திட்ட கிராம வீதிக்கான காப்பற் இடும் பணியை வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ம.ஜெகதீஸ்வரன் நேற்று ஆரம்பித்து வைத்தார்.

தற்போதைய அரசாங்கத்தினால் கிராமப்புற வீதிகளை அபிவிருத்தி செய்யும் வேலைத்திட்டம் நாடு முழுவதும் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.

அதற்கமைவாக 23 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கீட்டில் 810 மீற்றர் தூரத்திற்கான புளியங்குளம் – பரசங்குளம் வீதி காப்பற் இடும்பணி ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இந்நிகழ்வில் தேசிய மக்கள் சக்தியின் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ம.ஜெகதீஸ்வரன், கட்சி ஆதரவாளர்கள், பொதுமக்கள் எனஒ பலரும் கலந்து கொண்டிருந்தனர்.





# பனங்கட்டிகொட்டு மீனவர்சங்கத்தை நேற்றுச் சந்தித்தார் ரவிகரன் எம்.பி.

**(விஜயரத்தினம் சரவணன்)**

மன்னார் – பனங்கட்டிக்கொட்டு மீனவர் சங்கத்தினரை வன்னிமாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் துரைராசா ரவிகரன் நேற்றுச் சந்தித்துக் கலந்துரையாடினார்.

இதன்போது மீனவர் சங்கத்தினரால் நாடாளுமன்ற உறுப்பினர் ரவிகரன் பொன்னாடை போர்த்தி வரவேற்கப்பட்டார்.

பனங்கட்டிக்கொட்டு மீனவர்சங்க கட்டடத்தில் இடம்பெற்ற இச்சந்திப்பில் கடற்றொழிலாளர்கள் எதிர்நோக்கும் பல்வேறு இடர்பாடுகள் தொடர்பில் மீனவர்சங்கத்தினரால் நாடாளுமன்ற உறுப்பினரின் கவனத்திற்குக் கொண்டுவரப் பட்டது.

அத்தோடு தமது கோரிக்கைகள் அடங்கிய மகஜரையும் மீனவசங்கத்தினர் இதன்போது அவரிடம் கையளித்தனர்.

பனங்கட்டிக்கொட்டு மீனவர் சங்கத்தினரால் முன்வைக்கப்பட்ட குறைபாடுகள்தொடர்பில் உரியதரப்பினரின் கவனத்திற்கு கொண்டுவருவதுடன், அவை தொடர்பில் ஆராய்ந்து அக்குறைபாடுகளைத் தீர்ப்பது தொடர்பில் கவனஞ் செலுத்தப்படுமென ரவிகரனால் இதன்போது தெரிவிக்கப்பட்டது.

இச்சந்திப்பில் இலங்கைத் தமிழ் அரசுக்கட்சியின் மன்னார் மாவட்டத் தலைவர் பாலுச்சாமி ஜெயக்குமார், இலங்கைத் தமிழ் அரசுக்கட்சியின் மன்னார் நகரசபை உறுப்பினர் சோமநாதன் பிரசாத் ஆகியோரும் பங்கேற்றிருந்தனர்.









# மட்டு. தரிசனத்தில் வெள்ளைப் பிரம்பு தினம்!

(பழுவூரான்)

மட்டக்களப்பு சிங்கிங்பிஸ் லயன்ஸ் கழகம், மட்டக்களப்பு தரிசனம் விழிப்புல னற்றோர் பாடசாலை மற்றும் மட்டக் களப்பு உதயம் விழிப்புலனற்றோர் சங்கம் ஆகியவற்றின் ஏற்பாட்டில் சர்வதேச வெள்ளைப்பிரம்பு தினம் நேற்று முன் தினம் ஞாயிற்றுக்கிழமை கொண்டா டப்பட்டது.

மட்டக்களப்பு தரிசனம் விழிப்புல னற்றோர் பாடசாலைத் தலைவர் நா.இதய ராஜன் தலைமையில் நடைபெற்ற இந் நிகழ்வில், அரிமாக் கழக மாவட்ட ஆளுநர் லயன் க.லோகேந்திரன் பிரதம விருந் தினராகவும், லியோ கழக மாவட்டத் தலைவர் லயன் கலாநிதி புளோரன்ஸ் பாரதி கென்னடி கௌரவ விருந்தினரா கவும், கல்முனை கொமர்ஷல் வங்கி முகா மையாளர் பேபியன் கனகசபை விஷேட விருந்தினராகவும், தரிசனம் விழிப்புல னற்றோர் பாசாலை பொருளாளர் லயன் அ.ரவீந்திரன் சிறப்பு விருந்தினராகவும் கலந்து சிறப்பித்தனர்.

இதன்போது விழிப்புணர்வு ஊர்வலம் கிழக்குப் பல்கலைக்கழக சுவாமி விபுலா னந்தா அழகியற் கற்கைகள் நிறுவக வளாக முன்றிலிலிருந்து ஆரம்ப மாகி, தரிசனம் விழிப்புலனற்றோர் பாட சாலையைச் சென்றடைந்தது.

அங்கு பாடல், கவிதைகள், நடனம் மற்றும் பாடல்கள் அரங்கேற்றப்பட்டமை குறிப்பிடத்தக்கது.





# மாணிக்கக் கற்கள் அகழ்வில் ஈடுபட்டு வந்த இருவர் மஸ்கெலியா பொலிஸாரால் கைது



(மஸ்கெலியா நிருபர)

சட்ட விரோதமாக மாணிக்கக் கற்கள் அகழ்வில் ஈடுபட்டு வந்த இருவரை மஸ்கெலியா பொலிஸார் கடந்த சனி யன்று கைது செய்து உள்ளனர்.

இவ்வாறு கைது செய்யப்பட்ட வர்கள் 45 வயது 52 வயது உடைய மவுஸ்சாகலை தோட்ட சீட்டன் பிரிவில் உள்ளவர்களாவர்.

மஸ்கெலியா பொலிஸ் நிலை யப் பொறுப்பதிகாரி எஸ் எஸ் புஷ்ப குமாரவுக்குக் கிடைக்க பெற்ற இரக சிய தகவல்களை தொடர்ந்து அவரது பணிப்புரையின் படி மஸ்கெலியா பொலிஸெ திடீர் சுற்றி வளைப்பு ஒன்றை மவுசாகலை ஓயா பகுதியில் மேற் கொண்டனர்.

அதன் போது மவுஸ்சாகலை தோட்ட சீட்டன் பிரிவில் உள்ள இருவர் மாணிக்க கற்கள் அகழ்வுக்கு பயன் படுத்தபடும் உபகரணங்களுடன் கைது செய்யப்பட்டு பொலிஸ் பிணையில் விடுதலை செய்யபட்டனர். நாளை ஹட்டன் நீதிமன்றத்தில் ஆஜராகும்படி அவர்ககள் பணிக்கப்பட்டுள்ளனர்.



# இலங்கைப் போக்குவரத்துச் சபை யாழ். சாலையின் ஊழியர்கள் ஒன்றுகூடலும் கல்விசார் கௌரவிப்பும்

(பூ.லின்ரன்)

இலங்கைப் போக்குவரத்துச் சபையின் யாழ்சாலை ஊழியர் நலன் புரிச் சங்கம் முன்னெடுத்த ஆண்டு விழாவும் கல்விசார் கௌரவிப்பு நிகழ்வும் கடந்த 31 ஆம் திகதி கோண்டாவிலில் உள்ள அலுவலகத்தின் செயலாற்றுகைப் பகுதி மண்டபத்தில் நடைபெற்றது.

பிரதம விருந்தினராக கோப்பாய் ஆசிரியர் கலாசாலை முதல்வர் செந்தமிழ்ச் சொல்லருவி சந்திரமௌலீசன் லலீசனும், கௌரவ விருந்தினராக போக்குவரத்துச் சபையின் வடபிராந்திய முகாமையாளர் கே.கேதீசனும் சிறப்பு விருந்தினராக முன்னாள் சாலைப் பணியாளர்களான கந்தையா துரைசிங்கம், மாணிக்கம் சற்குணம் ஆகியோரும் கலந்து கொண்டனர்.

கோண்டாவில் டிப்போவில் உள்ள வைரவர் ஆலயத்தில் இடம்பெற்ற விசேட பூசையைத் தொடர்ந்து விருந்தினர்களும் கல்விசார் கௌரவம் பெற்ற மாணவர்களும் மாலை அணிவிக்கப்பட்டு விழா மண்டபத்திற்கு அழைத்துச் செல்லப்பட்டனர். தொடர்ந்து கலை நிகழ்வுகள் இடம்பெற்றன.

நிறைவாக தரம் 05 புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தி எய்தியோர், க.பொ.த. சாதாரண தரத்தில் 7 ஏ இற்கு மேல் பெற்றோர் மற்றும் உயர்தரப் பரீட்சை அடிப்படையில் பல்கலைக் கழகங்களுக்குத் தெரிவானோர் என 17 மாணவர்களுக்கும் அவர்களது பெற்றோருக்குமான கௌரவிப்பு நிகழ்வு இடம்பெற்றது.









# இனக் குழுமங்களின் இருப்பைப் பாதுகாப்பவை அவற்றின் கலை, கலாசாரப் பண்பாடுகளேயாகும்

## கோறளைப்பற்று பிரதேச செயலாளர் விளக்கம்









ஒரு இனக் குழுமத்தின் இருப்பைப் பாதுகாக்கின்ற விடயங்களாக கலாசார, பண்பாடு மற்றும் கலைகள் காணப்படுகின்றன. பாரம்பரியமான கலாசார பண்பாடுகள் மருவி கைவிடப்பட்டமையே நோய்கள், பிணிகள் அதிகரித்திருக்கின்றமைக்குக் காரணமாகும் என மட்டக்களப்பு மாவட்டத்தின்,கோறளைப்பற்று தெற்கு பிரதேச செயலாளர் கா.சித்திரவேல் தெரிவித்துள்ளார்.

கடந்த சனிக்கிழமை மாலை சந்திவெளி ஸ்ரீ சித்தி விநாயகர் வித்தியாலய மண்டபத்தில் நடைபெற்ற கோறளைப்பற்று தெற்கு பிரதேச கலாசார இலக்கிய விழாவில் தலைமையுரையாற்றும் போதே அவர் இதனைத் தெரிவித்தார். இதன்போது அவர் மேலும் தெரிவிக்கையில் –

ஓர் இனக் குழுமத்தினுடைய பெயரைத்தக்கவைப்பதற்காக இருப்பைவெளிக் கொண்ட. வருவனவாக விளங்குபவை தான் பண்பாட்டு விழுமியங்கள். அந்த வகையில் எங்களுடைய தமிழர்களுக்கென்று பல்வேறுபட்ட கலை, பண்பாட்டு, கலாசார விழுமியங்கள் இருக்கின்றன. கால ஓட்டம் தொழில்நுட்ப யுகத்தை நோக்கி முன்னேறிக் கொண்டிருக்கின்ற இந்தக் காலகட்டத்திலும் எங்களுடைய கலை, கலாசாரங்கள் மருவிப் போகாமல் தொடர்ச்சியாக பின்பற்றிக் கொண்டு வருகின்ற பிரதேசங்களில் எங்களுடைய கோறளைப்பற்று பிரதேச செயல்கப் பிரிவு பிரதானமான ஒரு பங்கினை வெளிப்படுத்தி வருகின்றது.

எங்களுடைய கலை, கலாசாரம், பண்பாடுகள் ஒவ்வொன்றுக்கும் ஒவ்வொரு வகையான அர்த்தங்கள் இருக்கின்றன. விஞ்ஞான ரீதியாக பார்த்தாலும் கூட விழுமியங்களுக்குள் கட்டுப்பட்டவையாகத்தான் அமைந்திருப்பதனைக் காணக்கூடியதாக இருக்கின்றது. எங்களுடைய முன்னோர்கள் மிகவும் பெறுமதியாக, அருமையாகப் பேணிக்காத்த எங்களுடைய பண்பாடுகள் சிறப்பானவையாகவே உள்ளன.

தற்போது எங்கு பார்த்தாலும் நோய்கள், ஆனால் எங்களுடைய முன்னோர்களைப் பார்த்தால் பத்துப் பிள்ளைகள், பதினைந்து பிள்ளைகளைப் பெற்றெடுத்தவர்களாக இருப்பார்கள். ஆனால் இப்போதும் ஆரோக்கியமானவர்களாகவே இருக்கிறார்கள். இதற்குரிய காரணங்கள் என்னவென்று பார்த்தால் அவர்களுடைய பிறப்பிலிருந்து இறப்பு வரைக்கும் அவர்கள் பேணி வந்த கலாசார, பண்பாடுகள்தான்.

வேளாண்மைச் செய்கையைப் பார்த்தால்கூட கூட்டமாக பயணம் செய்து வாடி அமைத்து, சமைத்து உண்டு வேலையை மேற்கொண்டனர்.

அறுவடையான நெல்லை உரல், உலக்கை பயன்படுத்தி இடித்து, அம்மிக் குழவியில் கொச்சிக்காய், வெங்காயம் அரைத்து சமைத்து உண்ட பாரம்பரியம் இருக்கிறது.

இன்று அவற்றை, நூதனசாலைகளிலும் பார்க்கவேண்டிய, நிலைதான் காணப்படுகிறது. இவை எல்லாம் மருவிப் போனமைதான் நோய்கள், பிணிகள் அதிகரித்தமைக்குக் காரணமாக காணப்படுகிம்றன. – என அவர் தெரிவித்தார்.

உதவி பிரதேச செயலாளர் திருமதி லோகினி விவேகானந்தராஜின், வரவேற்புரையுடன் ஆரம்பமான இவ்விழாவில், கிழக்கு மாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தின் பணிப்பாளர் திருமதி மேனகா புவிக்குமார், மாவட்ட கலாசார உத்தியோகத்தர் எம்.ஏ.சி.ஜெய்னுலாப்தீன் உள்ளிட்ட பலர்கலந்து கொண்டனர்.

இந்நிகழ்வில் பாரம்பரிய பறை இசையுடன், அதிதிகள் அழைத்துவரப்பட்டமையைத் தொடர்ந்து வசந்தன்பாடல், நாட்டார்பாடல், நடனம், பரதநாட்டியம், கட்டியகாரன், நாட்டுக்கூத்து, சுளகுநடனம் உள்ளிட்ட பிரதேச கலைஞர்களின் கலை நிகழ்வுகள் ஆற்றுகை செய்யப்பட்டன.

தொடர்ந்து இதன்போது பொன்னுசாமி சுந்தரமூர்த்தி(நாட்டார் கலை), நாகமுத்து பிள்ளையான் (நாட்டுக்கூத்து), பிள்ளையான் வேலாயுதம்(நாட்டுக்கூத்து), கிருஷ்ணப்பிள்ளை கிருபைரெட்ணம் (மகிடி கூத்து) ஆகியோரும், இளம் கலைஞர்களான திருமதி அபிநயா விஷ்ணுவர்த்தன்(நடனம்), திருமதி ஜெயந்தி ஜதீஸ்சன்(நாடகம்) ஆகியோரும் பொன்னாடை போர்த்தி நினைவுச்சின்னம், சான்றிதழ் வழங்கிக் கௌரவிக்கப்பட்டனர்.

# திருமந்திரத்தைப் படிப்போம் திருமூலரை நினைப்போம்!

## இன்று திருமூலர் குருபூசை



மகாதேவ ஐயர் ஜெயராமசர்மா,
மேனாள் தமிழ்மொழிக் கல்வி இயக்குநர்,
மெல்பேர்ன், ஆஸ்திரேலியா.

பழமைக்குப் பழமையாய் புதுமைக்குப் புதுமையாய் மூவாயிரம் ஆண்டு வரலாற்றைக் கொண்டது எங்கள் தமிழ் மொழி. இலக்கணத்தை, இலக்கியத்தை, இசையை, நாடகத்தை, சமயத்தை , தத்துவத்தை, அரசியலை, அறவியலை, அறிவியலை – ஆழமாய், அகலமாய் , நுண்மாண் நுழை புலத் துடன் கொண்டு விளங்கும் பெருமை மிக்க ஒரே மொழி தமிழ் எனபதை மறுத்து விட முடியாது. தமிழ் மொழியில் காணப்படும் ஒவ்வொரு நூல்களுமே – உயரிய பண்பாட்டை, வாழும் வாழ்வியல் முறைகளை– பக்குவமாய் பகர்ந்து நிற்பதுதான் மிகவும் உன்னதமாகும். அந்தவகையில் மூவாயிரம் பாடல் களைக் கொண்டதாய் முத்திரை பதித்து நிற்பதுதான் " திருமந்திரம் " ஆகும்.


இந்தத் திருமந்திரம் தமிழுக்குக் கிடைத்த பெரும் பொக்கிஷமாகும். இதனைத் தத்துவ நூல் என்பதா, சமய நூல் என்பதா, மருத்துவ நூல், என்பதா அறிவியல் நூல் என்பதா அல்லது புதுமைக் கருத்துக்களை உரத்துச் சொல்லும் புரட்சி நூல் என்பதா? இப்படிப் பல நிலையில் பன்முகங் கொண்டதாக இத் திருநூல் அமைந்திருக்கிறது என்றுதான் எண்ணிட வைக்கிறது. அந்த அளவுக்கு தமிழ்ப் உலகில் திருமந்திரம் தனித்துவமான ஒரு நூலாக மிளிர்ந்து நிற்கிறது என்பதை மறுத்துரைத்துவிடல் இயலாது.

திருமந்திரத்தை எமக்களித்த அந்தத் திருவருளாளரைப் பற்றிய செய்தி பெரிய புராணத்தில் சேக்கிழார் பெருமானால் எடுத்துச் சொல்லப்படுகிறது. திருத்தொண்டர் தொகையினைப் பாடிய சுந்தரமூர்த்தி சுவாமிகள் இவரை "நம்பிரான்" என்று உயர் நிலைப்படுத்தியே அறிமுகம் செய்கிறார் என்பது நோக்க த்தககது. சம்பந்தப் பெருமானை " எம்பிரான்" என்றவர் திருமூலரை " நம்பிரான் " என்று சுட்டுவது மன மிருத்த வேண்டிய கருத்தாகும்.

திருமூலர் என்பவர் யார் ? அவரின் ஆதி என்ன? அவரின் மூலந்தான் என்ன ? என்பது பற்றிக் கதைகள் பல இருக்கின்றன. வள்ளுவரைப் பற்றியும் இப்படிப் பல கதைகள் இருக்கின்றன. இங்கு கதைகளைக் கவனத்தில் எடுக்க வேண்டிய அவசியமில்லை என்பதே பொருத்தமாகும். அவர்களால் மக்களுக்கு வழங் கப்பட்ட கருவூலமான நூலே முக்கியமானது என்பதை கவனத்தில் எடுப்பதே சாலச் சிறந்ததாகும்.

"என்னை நன்றாக இறைவன் படைத்தனன்
தன்னை நன்றாகத் தமிழ் செய்யுமாறே"

இதுதான் திருமூலரின் நிலையாகும். இறைவன் தன்னைப் படைத்ததற்கான சரியான விடையைத் திருமூலரே தருகிறார். " தமிழ் கொண்டு தன்னைப் பாடவே இறைவன் படைத்தான் பணித்தான்" என்பது தான் அந்த மறுமொழியாகும். இதுதான் அவரின் பிறப்பின் நோக்கமாகும். இங்கே தமிழ் என்று அழுத் திச் சொல்லப்படுவது கருத்திருத்த வேண்டியதேயாகும். திருமூலர் இறைவன் விருப்பப்படி தமிழில் நன்றாகவே பாடினார். அறம் பாடினார். பொருள் பாடினார். இன்பம் பாடினார். தத்துவம் பாடினார். யோகம்




பாடினார். ஆரோக்கியம் பாடினார். ஒழுக்கம் பாடினார். நிலையாமை பாடினார். விஞ்ஞானம் மொழிந்தார். அதேவேளை அரிய மெஞ்ஞானமும் மொழிந்தார். எதைப் பாடினாலும் இறைவனை அக மிருத்தியே அத்தனையும் தந்துநின்றார் என்பதுதான் கவனத்தில் கொள்ள வேண்டியதாகும். சைவ சித்தாந்தம், யோக சாத்திரமுறை, விஞ்ஞானமுறை என்று திருமந்திரம் இருந்தாலும் அடிநாதமாய் அமைந்திருந்திருந்தது பரம்பொருளை உணர்ந்து கொள்ளுதலே என்பதை மறந்துவிடக் கூடாது.

திருமந்திரம் ஒன்பது தந்திரங்களையும் மூவாயிரம் பாடல்களையும் கொண்டது. ஆண்டுக்கு ஒரு பாட லாக மூவாயிரம் பாடல்களைப் பாடி மூவாயிரம் ஆண்டுகள் இருந்திருக்கிறார் என்பது வரலாறு. இதில் நாம் நுழைந்து விவாதம் செய்ய வேண்டியதில்லை. திருமூலரைச் சித்தர் என்றே அழைப்பது வழக்கம். சித்தர்கள் வாழ்வானது விசித்திரமானது. அறிய முடியா பல அதிசயங்கள் கொண்டது என்பதுதான் பொதுவான ஒரு கருத்து நிலையாகும். அவரின் பிறப்போ அல்லது அவரின் மறைவோ பற்றிய சர்ச்சைகளை விட்டு விட்டு அவரின் சிந்தனைக் கருவூலமான திருமந்திரத்தையும் அதன் மூலம் யாவரையும் திரும்பிப் பார்த்திட வைத்திட்ட திறத்தையுமே நாமனைவரும் எம்மகத்தில் அமர்திட வேண்டும். அதுதான் மிகவும் பொருத்த மானதுமாகும்.

மூவாயிரம் பாடல்களும் தமிழுக்குக் கிடைத்த வைரங்கள். அவற்றில் அறிவார்ந்த பல கருத்துகள் பொதிந்திருக்கின்றன என்பதை அனைவருமே ஒத்துக்கொள்ளுவார்கள். அறிவார்ந்த கருத்துக்களை வெளிப்படுத்த திருமூலர் கையாண்ட மொழி நடையை வியந்துமே பார்க்க வேண்டி இருக்கிறது. இலகுவான சொல்லாக இருக்கும். படிக்கும் பொழுது ஒரு கருத்தை எமக்குள் ஏற்படுத்தும். ஆனால் உள்நுழைந்து பார்க்கும் பொழுதுதான் திருமூலர் தெரிவார். அவர் எம்மைத் திரும்பிப் பார்க்க வைத்தி டக் கையாண்ட

தொடர்ச்சி ▼

# திருமந்திரத்தைப் படிப்போம் திருமூலரை நினைப்போம்!

தொடர்ச்சி ▲

சித்தும் தெரிய வரும். அந்த அளவுக்கு ஆழம் நிறைந் திருக்கும். அதேவேளை கவிதை அழகும் செறிந்திருக் கும். அதற்குள் பக்தியும் , தத்துவமும் , புதைந்தும் இருக்கும். இப்படியான சிறப் பினை வேறெதிலுமே காணமுடியாது. ஆனபடியால்த்தான் அது " திருமந் திரம் " என்னும் பெயரினைத் தாங்கிடும் பெருமைக்கு ஆளானது எனலாம்.

ஆதியும் அந்தமும் இல்லா அரும்பெருஞ் சோதியை அனைவருமே தேடுகின்றோம். அந்த அருட்சோ தியை வேண்டிப் பல இடங்களைத் தேடி யும் ஓடுகின்றோம்.மனம் அங்கலாய்த்தபடியே இருக்கி றது. அருட்பெருஞ்சோதியை அறிய முடியாமல் இருப்பார்க்கு திருமூலர் புதுமையாய் ஒரு கருத்தைச் சொல்லி புதுப் பாதையையும் காட்டுகின்றார். இது யாருமே சிந்திக்கா சிந்தனையாகும்.

அன்பும் சிவமும் இரண்டென்பர் அறிவிலார்
அன்பே சிவமாவது ஆரும் அறிகிலார்
அன்பே சிவமாவது ஆரும் அறிந்தபின்
அன்பே சிவமாய் அமர்ந் திருப்பாரே

இந்தப் பாடல் அமைப்பே அற்புதம். சிவனைப் பற்றிய சிந்தனை வந்ததும் திருமூலரிடம் அன்புதான் அமர்ந்து விடுகிறது என்பதை இங்கே காணமுடிகிறது. பாடலின் நான்கு வரிகளின் தொடக்கமே அன்பாய் மலர்கிறது. சிவன் என்றதும் அன்புதான் அங்கே முகிழ்க்கிறது. அன்ப்பைச் சிவனைப் பிரிக்கவே முடியாது என்னும் திருமூலர் நினைப்பு மிகப்பெரிய நிலை அல்லவா ?

சித்தம் போக்கு சிவன் போக்கு என்று சொல்லுவதை நாமெல்லாம் கேட்டிருக்கின்றோம். இதன் அர்த்தம் சிவபெருமானின் போக்கானது அன்பு நிலையே யாகும்.இதனைக் கருத்திருத்தியே திருமூலரும் சிவனை "அன்பாய் " காணுகின்றார். ஆகவேதான் சிவன் வேறல்ல - அன்பு வேறல்ல. இரண்டுமே ஒன்றுதான் என்று உரக்கக் கூறுகிறார். ஆண்டவனை அன்பாய்க் காணுவதே மிகவும் உகந்த நிலை என்பதுதான் திருமூலர் எண்ணமாகும். பரம் பொருளை அன்புடன் இணைத்து அப்பரம்பொருளுக்கு அன்புதான் பெயர். அந்த அந்த அன்புதான் சிவன் என்று காட்டும் பாங்கில் யாவரையும் திரும்பிப் பார்த் திட வைக்கிறார் என்றுதான் சொல்ல வேண்டும். விளங்காதவருக்கும் விளங்கப் பண்ணிடும் உத்தியாய் இருக்கிறதல்லவா ?

உடம்பைப் பற்றிய திருமூலர் பார்வை மிகவும் வேறுபட்டது. மற்றவர்கள் பார்க்கா பார்வை. திருமூலர் பார்வையோ யாவரையும் விட வித்தியாசமானதாய் அமைந்திருக்கிறது. உடம்பு இழுக்கா என்றால் இல் லையே என்கிறார். அதற்குத் தக்க காரணமும் தரு கிறார். அங்குகூட பரம்பொருளையே உட்புகுத்தியும் நிற்கிறார். இந்த நிலையில் திருமூலர் கருத்துகள் மந்திரமாய் ஒளிர்கிறது எனலாம்.

உடம்பார் அழியில் உயிரார் அழிவர்
திடம்பட மெய்ஞ்ஞானஞ் சேரவு மாட்டார்
உடம்பை வளர்க்கும் உபாயம் அறிந்தே
உடம்பை வளர்த்தேன் உயிர்வளர்த் தேனே.

உடம்பினை முன்னம் இழுக்கென்றிருந்தேன்
உடம்பினுக் குள்ளே உறுபொருள் கண்டேன்
உடம்புளே உத்தமன் கோயில்கொண் டானென்று
உடம்பினை யானிருந் தோம்புகின்றேனே.

உள்ளம் பெருங்கோயில் ஊனுடம்பு ஆலயம்
வள்ளற் பிரானுக்கு வாய் கோபுரவாயில்
தெள்ளத் தெளிந்தார்க்குச் சீவன் சிவலிங்கம்
கள்ளப் புலனைந்தும் காளாமணி விளக்கே

உள்ளத்தின் உள்ளே உளபல தீர்த்தங்கள்
மெள்ளக் குடைந்து நின்றாடார் வினைகெடப்
பள்ளமும் மேடும் பறந்து திரிவாரே
கள்ள மனமுடைக் கல்வி இலோரே

தேனுக்குள் இன்பம் கருப்போ சிவப்போ
வானுக்குள் ஈசனைத் தேடும் மதியிலீர்
தேனுக்குள் இன்பம் செறிந்திருந்தார்போல்
ஊனுக்குள் ஈசன் ஒளிந்திருந்தானே.

இவ்வாறு உடம்பைப் பற்றிய சிந்தனையோ, பார்வையோ , மற்றெவருக்கும் வரவேயில்லை. திருமூலர் ஒருவருக்கே வந்திருக்கிறது. அத னால் அவரின் கருத்துக்கள் " திருமந்திரம்" ஆகியே இருக்கிறது.

புதுவிய பார்வை , புதிய சிந்தனை... அறிவுக்கு அப்பால் உணர்வால் உணரும் உன்னதைத்தைதே திருமூலர் காட்டி இருக்கிறார்.

யாவர்க்கு மாம்இறை வற்கொரு பச்சிலை
யாவர்க்கு மாம்பசு வுக்கொரு வாயுறை
யாவர்க்கு மாம்உண்ணும் போதொரு கைப்பிடி
யாவர்க்கு மாம்பிறர்க் கின்னுரை தானே!

திருமூலர் தனித்துவமான சிந்தனையை இப் பாடலும் அதன் அர்த்தமும் எமக்களிகிறது. இப்பாடல் ஊடா க திருமூலர் சமூகத்துக்கு எதனை உணர்த்- திட விரும்புகிறார் என்பதே மிக மிக முக்கியமானதா கும். பரம்பொருளைப் பூசிப்பதற்குஒரு பச்சிலையே போதும் என்கிறார். பரம்பொருளைப் பூசித்தால் மட்டும் போதுமா என்று கேட்டு விட்டு - பசுவுக்குப் புல்லுக் கொடு .உண்ணும் போது யாராவது வந்தால் ஒரு கைப்பிடி உணவு கொடு. இப்படி யெல்லாம் உனக்குச் செய்வது கஷ்டமாக இருந்தால் நல்லதாக ஒரு வார்த்தை யினையாவது மற்றவரைப் பார்த்துச் சொல்லிவிடு. என்று குழந்தைகளுக்குப் பாடம் நடத்துவதுபோல எமக்கெல்லாம் எடுத்துரைக்கின்றார். பரம்பொருளை நாடுவதும், பூசிப்பதும் எவ்வளவு முக்கியமோ அதே முக்கியத்து வத்தை பசுவுக்கு வாயுறை கொடுப்பதற்கும், உண்ணும்போது ஒரு கைப்பிடி கொடுப்பதற்கும், இன் னுரை மற்றவர்க்கு வழங்குவதற்கும் திருமூலர் கொடுத்து நிற்கிறார் என்பதுதான் அகம் அமர்த்திட வேண்டிய கருத்தாகும்.மகேசன் சேவையுடன் சமூகச் சிந்தனையும் மிகவும் அவசியமானதுதான் என்ப தையே திருமூலர் எண்ணிச் சொல்லுகிறார் என்பதே கருத்திருத்த வேண்டிய கரு எனலாம்.இந்தப் பாட லின் மூலம் நல்ல அறமும் உணர்த்தப்படுகிறது என்பதும் கவனத்தில் கொள்ளப்படல் வேண்டும்.அறங் களை இலகுவாக்கி அதனையாவது இருக்கும் காலத்தில் செய்யுங்கள் என்று நல்ல குருவாய் நல்லதொரு உபதேசத்தை வழங்கியவர் - மனித வாழ்வினை

தொடர்ச்சி ▼

# திருமந்திரத்தைப் படிப்போம் திருமூலரை நினைப்போம்!

**தொடர்ச்சி ▲**

யும், அதன் நிலையாமையையும் படம்பிடித்துக் காட்டுகிறார். திருமூலரைத் தவிர எவராலுமே இப்படி விளக்கிடவும் முடியாது. உணர்த்திடவும் முடியாது என்பதுதான் உண்மை.

அடப்பண்ணி வைத்தார் அடிசிலை உண்டார்
மடக்கொடி யாரொடு மந்தணங் கொண்டார்
இடப்பக்க மேஇறை நொந்ததிங் கென்றார்
கிடக்கப் படுத்தார் கிடந்தொழிந் தாரே
ஊரெல்லாம் கூடி ஒலிக்க அழுதிட்டு
பேரினை நீக்கிப் பிணம்என்று பேரிட்டுச்
சூரையங் காட்டிடைக் கொண்டுபோய்ச் சுட்டிட்டு
நீரினில் மூழ்கி நினைப்பொழிந் தார்களே!

வந்தார். நன்றாகவே அதுவும் சுவையாகவே உண்டார். அழகான மனைவியுடன் இன்பமாய் இருந்-தார். இட துபக்கம் சிறிது வலிக்கிறது என்றார். நோவினால் படுத்தார். படுத்தவர் படுத்தே விட்டார். எழவே இல்லை ! ஒரு நாடகம் போல காட்டி மனித மரணத்தைத் திருமூலர் சமூகத்துக்கு உணர்த்தி நிற்கிறார். இங்கே நிலை யாமையும் இருக்கிறது. மருத்துவமும் இருக்கிறது. இடப்பக்கம் நொந்தால் இருதய நோய். அதனால் உயிராபத்து வரும். இதனை எத்தனையோ வருடங்களுக்கு முன்னர் திருமூலர் என்னும் சித்தர் பெருமான் சொல்லி இருப்பது எம்மையெல்லாம் அவர் பக்கம் திருப்பிப் பார்த்திட வைத்திடும் நிலைதானே.

படுத்தவர் எழவேயில்லை. படுத்தவர் பெரிய அந்தஸ்த்தில் உள்ளவர். வசதிகள் வாய்ப்புகள் நிறைந்த வர்.ஆள் பலம் படைத்தவர்.அரசியலில் உயர்நிலையில் இருப்பவர். அனைவரையும் ஆட்டிவைத்தே வாழ் ந்தவர். அவரிப்போ எழமுடியாமல் வீழ்ந்துவிட்டார். ஊரிருப்பவர்கள் எல்லோரும் வந்தார்கள். ஒலிக்கி அழுதார்கள். சற்று நேரங்கழித்து – அந்தஸ்த்திலிருந்தவரின் பெயரினைச் சொல்லாது எப்பத்தான் இந்தப் பிணத்தை எடுக்கப் போகிறார்களோ என்று சொல்லி நிற்கின்றார்கள். – நிலைமை உடனேயே மாறி விட்டது என்கிறார் திருமூலர். அதுமட்டுமா? ஆடவைத்து நின்றவரின் ஆட்டம் அடங்கிய பின் பிணம் என்னும் பெயருடன் சூரையங் காட்டுக்குக் கொண்டு சென்று தீயிட்டு எரித்து , அங்குள்ள நீர் நிலையில் மூழ்கி எழுந்து – அந்தஸ்த்தில் இருந்த வரையே நினைப்பிலிருந்து அகற்றியே விட்டார்கள். இதுவும் ஒரு படமாக காட்டப்படுகிறது அல்லவா! இதுதான் வாழ்கை ! இதுதான் வாழ்கையின் நிதர்சனமான நிலை !

திருமூலரின் சிந்தனைகளைப் பார்த்தால் அவர் சமய நம்பிக்கை , கடவுள் நம்பிக்கை , உடையவரா என்னும் ஐயமும் ஏற்படலாம். அவர் ஆத்திகரா அல்லது நாத்திகரா என்று கூட எண்ணவும் வைக்கும். கடவுளை, கோவிலை , நம்பிக்கைகளை எல்லாம் எல்லாம் அவர் பார்க்கும் பார்வைகள் ,அவரின் கருத்துக்கள் சாதாரன மக்களை சஞ்சலத்துக்கு ஆளாக்கி விடும் வண்ணம் இருப்பதைக் காணக்கூடிய தாக இருக்கலாம். நதி மூலம் ரிஷி மூலம் அறியவே முடியாது என்பதையும் கேள்விப் பட்டிருக்கிறோம்.

திருமூலர் ஒரு சித்தர். அவரின் போக்கு அந்தப் பரம் பொருளுக்கே தெரியும். விளங்கும். திருமூலரைப் பற்றி விமர்சனம் செய்வதற்கோ, அவரின் கருத்துக்களை மறுப்பதற்கோ உரிய அறிவும், ஆற்றலும், ஞானமும், சாதரண நிலையில் இருக்கின்ற அதாவது உலகியலில் உழன்று கொண்டிருக்கும் எங்களிடம் இல்லை என்பதை மனமிருத்தி “திருமந்திரத்தைப் படிப்போம்” திருமூலமூலரை நினைப்போம்!

## மேற்கு கடலில் மீட்கப்பட்ட போதைப்பொருள்கள் டுபாயில் வசிக்கும் குற்றவாளிக்கு சொந்தமானவை

### விசாரணையில் வெளிக்கொணர்வு



நாட்டின் மேற்கு கடற்பரப்பில் கைப்பற்றப்பட்ட 335 கிலோகிராம் போதைப் பொருள் கடத்தலின் பின்னணியில் டுபாயில் வசிக்கும் தினுக இருக்கின் றமை வெளிக்கொணரப்பட்டுள்ளது.

போதைப்பொருள் கடத்தலுக்கு பயன்படுத்தப்பட்ட படகின் உரிமையாளர் உள்ளிட்ட சந்தேகநபர்களிடம் முன்னெடுக்கப்பட்டிருந்த விசாரணைகளுக்கமைய இந்த தகவல் வெளிக் கொணரப்பட்டுள்ளது.

படகின் உரிமையாளர் கடந்த சனிக்கிழமை காலியில் கைது செய்யப் பட்டிருந்த நிலையில் அவர் 07 நாள்கள் தடுப்புக்காவல் உத்தரவின் கீழ் விசாரணைக்குட்படுத்தப்பட்டு வருகின்றார்.

போதைப்பொருட்கள் கடத்தப்பட்ட படகிலிருந்த 06 மீனவர்களும் கைது செய்யப்பட்டுள்ள நிலையில், நீதிமன்றத்தில் ஆஜர்ப்படுத்தப்படவுள்ளனர்.

படகிலிருந்து கைப்பற்றப்பட்ட ஐஸ் மற்றும் ஹெரோயின் போதைப் பொருள்களின் பெறுமதி 500 கோடி ரூபாவிற்கும் அதிகமாகும்.

# விமானப் பணிப்பெண்ணைத் தாக்கிய சவூதிப் பிரஜைக்கு ஒத்திவைக்கப்பட்ட மூன்று மாத சிறைத் தண்டனை



ரியாதில் இருந்து கட்டுநாயக்க விமான நிலையத்துக்கு வந்த ஶ்ரீலங்கன் ஏர்லைன்ஸ் விமானத்தில், விமானப் பணிப்பெண் ஒருவரைத் தாக்கியமை தொடர்பாக சவூதி அரேபியப் பிரஜையொருவருக்கு எதிராக வழக்கில் நேற்று தீர்ப்பளிக்கப்பட்டது.

கொழும்பு பிரதான நீதவான் அஸங்க எஸ். போதராகமவினால் இந்த வழக்கு தொடர்பாக தீர்ப்பு அறிவிக்கப்பட்டது.

விமானம் தரையிறங்கத் தயாரான போது, பயணிகள் அனைவரும் இருக்கைப்பட்டையுடன் அமர்ந்திருக்க வேண்டும் என்ற விமானப் பாதுகாப்பு விதிமுறைகளை மீறி சந்தேகநபர் கழிவறைக்குச் செல்ல முயன்றதனால் விமானப் பணிப்பெண்ணுடன் வாக்குவாதம் ஏற்பட்டு பின்னர் அது மோதலாக மாறியது.

கட்டுநாயக்க விமான நிலையத்தில் விமானம் தரையிறங்கியதும், உடனடியாகத் தகவலறிந்து பொலிஸ் அதிகாரிகளால் கைது செய்யப்பட்டார்.

சந்தேகநபர், நேற்று நீதிமன்றில் முன்னிலைப்படுத்தப்பட்டபோது அவர் குற்றத்தை ஒப்புக்கொண்டார்.

இதனையடுத்து, அவருக்கு ஐந்து வருடங்களுக்கு ஒத்திவைக்கப்பட்ட மூன்று மாத சிறைத் தண்டனையும், 10,000 ரூபா அபராதமும் விதிக்கப்பட்டது.



# 10 மாதங்களில் வாகன இறக்குமதி காரணமாக சுங்கத்துக்கு பல்லாயிரம் கோடி ரூபா வருமானம்

இந்த ஆண்டின் முதல் 10 மாதங்களில் இலங்கை சுமார் 250,000 வாகனங்களை இறக்குமதி செய்துள்ளதாகவும், இதன் மூலம் வரியாக 63,000 கோடி ரூபாயை ஈட்டியுள்ளதாகவும் சுங்கத் திணைக்களம் அறிவித்துள்ளது.

இந்த வரி வருமானம், கடந்த ஆண்டின் அதே காலப்பகுதியுடன் ஒப்பிடுகையில் பல மடங்கு அதிகமாகும்.

மேலும், இந்த ஆண்டின் முதல் 9 மாதங்களில் தனிநபர் மற்றும் வர்த்தக வாகனங்கள் உட்பட ஒட்டுமொத்த இறக்குமதிக்காக சுமார் 1.2 பில்லியன் அமெரிக்க டொலர்கள் (சுமார் 36,431 கோடி இலங்கை ரூபா) செலவிடப்பட்டுள்ளது.

இதில் அதிகபட்ச செலவினம் செப்டம்பர் மாதத்தில் (286 மில்லியன் அமெரிக்க டொலர்கள்) பதிவாகியுள்ளது.

மத்திய வங்கியின் தரவுகளின்படி, ஏப்ரல் மாதம் 134 மில்லியன் டொலர்கள், மே மாதம் 118 மில்லியன் டொலர்கள், ஜூன் மாதம் 163 மில்லியன் டொலர்கள், ஜூலை மாதம் 193 மில்லியன் டொலர்கள் மற்றும் ஓகஸ்ட் மாதம் 249 மில்லியன் டொலர்கள் என மாதந்தோறும் வாகன இறக்குமதிக்காக செலவிடப்பட்டுள்ளது.



# வவுனியா பல்கலைக்கழக மாணவன் மரணம்: விசாரணைக்கு கல்வி அமைச்சு உத்தரவு

வவுனியா பல்கலைக்கழகத்தில் மாணவர் ஒருவர் பகிடிவதை காரணமாக உயிரிழந்ததாகக் கூறப்படும் சம்பவம் குறித்து விசாரணை நடத்தப்படும் என்று கல்வி மற்றும் உயர்கல்வி அமைச்சு தெரிவித்துள்ளது.

பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் ஊடாக இந்த விசாரணை மேற்கொள்ளப்படும் என பிரதி அமைச்சர் மதுர செனவிரத்ன தெரிவித்துள்ளார்.

இதற்கிடையில், இந்த சம்பவம் குறித்து விசாரணைகள் ஆரம்பிக்கப் பட்டுள்ளதாக வவுனியா பல்கலைக் கழகத்தின் துணை வேந்தர் பேராசிரியர் அற்புதராஜா தெரிவித்துள்ளார்.

உயிரிழந்தவர் அநுராதபுரம், ஜய சிறிபுர பகுதியைச் சேர்ந்த 21 வயது டையவர் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# கடவத்தை – பண்டாரவத்தைப் பகுதியில் ஜனவரி வரை போக்குவரத்து மட்டுப்பாடு

மத்திய அதிவேக நெடுஞ்சாலை கட்டுமானப் பணிகள் காரணமாக, கொழும்பு – கண்டி பிரதான வீதியில் உள்ள கடவத்தை – பண்டாரவத்தை பிரதேசத்தில் வாகனப் போக்குவரத்து அடுத்த ஆண்டு ஜனவரி மாதம் 31 ஆம் திகதி வரை மட்டுப்படுத்தப்பட்டுள்ளதாக பொலிஸ் தெரிவித்துள்ளது.

வீதி அபிவிருத்தி அதிகார சபையின் அறிவிப்பின்படி, கொழும்பு – கண்டி பிரதான வீதியில் பாலம் ஒன்று, இரண்டு கட்டங்களாக அமைக்கப்படவுள்ளது.

இதன் முதலாம் கட்டத்தின் கீழ்,




கொழும்பில் இருந்து கண்டி நோக்கிச் செல்லும் இரண்டு வழித்தடங்களில் ஒரு வழித்தடம் மூடப்படும் எனவும் இரண்டாம் கட்டத்தின் கீழ், கண்டி திசையில் இருந்து கொழும்பு நோக்கிச் செல்லும் திசையில் ஒரு வழித் தடம் மூடப்படும் எனவும் அறிவிக்கப் பட்டுள்ளது.

ஒவ்வொரு திசையிலும் ஒரு வழித் தடம் மூடப்படுவதால், இந்த முழுமையான கட்டுமானக் காலப்பகுதியிலும் வீதியில் வாகன நெரிசல் ஏற்பட அதிக வாய்ப்புள்ளதாக பொலிஸ் எச்சரித் துள்ளது.

எனவே, கொழும்பு – கண்டி வீதியைப் பயன்படுத்தும் சாரதிகள், இயலுமான வரை கடவத்தை வெளிவட்ட வீதியைப் பயன்படுத்துமாறு பொலீஸ் கோரிக்கை விடுத்துள்ளது.

# எஸ்.எல்.எஸ். இல்லை என்றால் விற்பனை செய்வதற்குத் தடை




உள்ளூரில் உற்பத்தி செய்யப்படும், "உடனடியாகப் பருகக்கூடிய" அனைத்துப் பழச்சாறு பானங்களும் கட்டாயமாக இலங்கைத் தரச் சான்றிதழ் (SLS – Sri Lanka Standards) முத்திரையுடன் இருக்க வேண்டும் என நுகர்வோர் விவகார அதிகாரசபை நினைவூட்டியுள்ளது.

அத்துடன், இதே வகையைச் சேர்ந்த இறக்குமதிசெய்யப்பட்டபழச்சாறுபானங்கள், விற்பனைக்கு வருவதற்கு முன்னர், இறக்குமதி பரிசோதனைத் திட்டத்தின் கீழ் முன் அனுமதி பெற வேண்டியது அவசியம் எனவும் நுகர்வோர் விவகார அதிகாரசபை தெரிவித்துள்ளது.

இந்த விதிமுறை, தேசிய உணவு மற்றும் பானத் தரச் சான்றிதழ் தேவைகளுக்கு இணங்க, நுகர்வோருக்கான தயாரிப்பு பாதுகாப்பும் தரத்தையும் உறுதி செய்வதை நோக்கமாகக் கொண்டதாகும்.

அத்துடன், இது குறித்து நுகர்வோர் தங்களின் முறைப்பாடுகளை, 1977 என்ற நுகர்வோர் விவகார ஆணையத்தின் இலக்கத்திற்குத் தொடர்பு கொண்டு அறிவிக்க முடியும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

# மீனவர்கள், படகுகளை விடுவிக்க நடவடிக்கை; எஸ்.ஜெய்சங்கருக்கு முதல்வர் ஸ்டாலின் கடிதம்





இலங்கை வசம் உள்ள மீனவர்கள், படகுகளை விடுவிக்க தேவையான நடவடிக்கைகளை எடுக்க வலியுறுத்தி வெளியுறவுத் துறை அமைச்சர் எஸ்.ஜெய் சங்கருக்கு முதல்வர் மு.க.ஸ்டாலின் கடிதம் எழுதியுள்ளார்.

இதுகுறித்து அவர் நேற்று எழுதிய கடிதத்தில் குறிப்பிடுகையில்,

"நவம்பர் 3 ஆம் திகதி நாகப்பட்டினம் மாவட்டத்தைச் சேர்ந்த 31 மீனவர்களை யும், அவர்களது மூன்று இயந்திரமய மாக்கப்பட்ட மீன்பிடிப் படகுகளையும் சிறைப்பிடித்துள்ள இலங்கைக் கடற் படையினர், அதே நாளில், மற்றொரு சம்பவத்தில், இராமநாதபுரம் மாவட்டத் தைச் சேர்ந்த நான்கு மீனவர்களையும், அவர்களது நாட்டுப் படகினையும் சிறைப் பிடித்துள்ளனர்.

மீனவர்களின் வாழ்க்கையும், அவர் களது வாழ்வாதாரமும் கடலுடன் பிரிக்க முடியாத வகையில் பின்னிப் பிணைந் துள்ளன. இதுபோன்று தொடர்ச்சியாக மீனவர்கள் கைது செய்யப்படும் சம்ப வங்கள் தமிழக மீனவ சமூகத்தினரி டையே ஆழ்ந்த துயரத்தை ஏற்படுத்தி யுள்ளது.

ஒவ்வொரு கைது நடவடிக்கையின் போதும், மீனவர்கள் தங்களது வாழ்வா தாரத்தை இழப்பதோடு மட்டுமல்லாமல், அவர்களது குடும்பத்தினரிடையே ஆழ்ந்த அச்ச உணர்வையும், பாதுகாப்பற்ற நிலை யையும் ஏற்படுத்தியுள்ளது.

தற்போதைய நிலவரப்படி, 114 மீன வர்களும், 247 படகுகளும் இலங்கை வசம் இருக்கிறது. எனவே, இலங்கை அர சால் சிறைபிடிக்கப்பட்டுள்ள அனைத்து தமிழக மீனவர்களையும், அவர்களது மீன்பிடிப் படகுகளையும் விடுவிப்பதற்கு உடனடியாக உரிய தூதரக நடவடிக்கை களை எடுக்க வேண்டும்." என்று குறிப் பிட்டுள்ளார்.

# குடும்பத்தில் ஒருவருக்கு அரசு வேலை; பிஹார் பிரசாரத்தில் பிரியங்கா உறுதி



பிஹார் சட்டப்பேரவைத் தேர்தலில் எதிர்க்கட்சிகளின் மகா கூட்டணி வெற்றி பெற்றால் தேர்தல் வாக்குறுதிப்படி ஒவ் வொரு குடும்பத்திலும் ஒருவருக்கு அரசு வேலை வழங்கப்படும் என்று பிரியங்கா காந்தி தெரிவித்துள்ளார்.

பிஹாரில் முதல்கட்டத் தேர்தல் எதிர் வரும் 6 ஆம் திகதி நடைபெற உள்ளது. அன்றைய தினம் 121 தொகுதிகளுக்கு தேர்தல் நடைபெற உள்ளது. இத்தொகுதி களில் தேர்தல் பிரச்சாரம் இன்றுடன் நிறைவடைய உள்ளது.

இந்நிலையில், சோன்பர்சா நகரில் நடைபெற்ற தேர்தல் பிரச்சாரத்தில் பேசிய காங்கிரஸ் பொதுச் செயலாள ரும் மக்களவை உறுப்பினருமான பிரியங்கா காந்தி வத்ரா, மாநிலத் தில் மகா கூட்டணி வெற்றி பெற்றால் ஒவ்வொரு குடும்பத்திலும் ஒருவருக்கு அரசு வேலை வழங்கப்படும், அரசு பணியாளர்களுக்கு பழைய ஓய்வூதிய திட்டம் அமல்படுத்தப்படும் என உறுதி அளித்துள்ளார்.

தேர்தல் பிரச்சாரத்தின்போது அவர் உரையாற்றுகையில்,

"நாட்டின் வளர்ச்சிக்கு பிஹார் மிகப் பெரிய பங்களிப்பை அளித்துள்ளது. அந்த வகையில், நாட்டின் குடிமகன் என்பதில் நீங்கள் பெருமை கொள் ளுங்கள். நமது அரசமைப்புதான் வயது வந்த அனைவருக்கும் வாக்களிக்கும் உரிமையை அளித்தது. அந்த உரிமை யைப் பறிக்கும் வகையில் தேசிய ஜன நாயகக் கூட்டணி செயல்பட்டு வருகிறது. பிஹாரில் 65 லட்சத்துக்கும் மேற்பட் டோரின் வாக்குகள் பறிக்கப்பட்டுள்ளன. இதன் பொருள், அவர்களின் உரி மைகள் பறிக்கப்பட்டுள்ளன. வாக் குரிமை போய்விட்டால் பிறகு எதுவும் இருக்காது. வாக்கு திருட்டு என்பது மக்களுக்கு எதிரான பெரிய சதி.

பிஹாரில் வேலைவாய்ப்பு இல் லாததால், பல லட்சம் இளைஞர்கள் வேலை தேடி நாட்டின் பல மாநிலங் களுக்குச் செல்கிறார்கள். தங்கள் குடும்பங்களை விட்டு விலகி இரவு பகலாக அவர்கள் போராடுகிறார்கள். உண்மையில் இந்த நாட்டை கட்டி எழுப்பியவர்கள் பிஹாரிகள். ஆனால், தற்போது அவர்கள் வேலையின்றி தவிக் கிறார்கள்.

விவசாயத்தின் மூலம் ஏராளமான மக்கள் பொருள் ஈட்டி வந்தார்கள். இன்று அதுவும் லாபகரமான தொழில் அல்ல. இங்குள்ள விவசாயிகள் கடின மாக உழைக்கிறார்கள். ஆனால், அவர் களின் பயிர்களுக்கு நியாயமான விலை கிடைப்பதில்லை.

அனைத்து பெரிய தொழில்களையும் பிரதமர் மோடி தனது நண்பர்களுக்கே வழங்குகிறார். பிஹாரில் அதானிக்கு மிக மிக குறைந்த விலையில் நிலம் வழங்கப்பட்டது. அதுமட்டுமல்ல, மோடி யின் நண்பர்களின் ஆயிரக்கணக் கான கோடி ரூபாய் கடன் தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது.

பிஹாரில் மகா கூட்டணி ஆட்சிக்கு வந்தால், தேர்தல் அறிக்கையில் தெரி விக்கப்பட்டபடி ஒவ்வொரு குடும்பத்திலும் ஒருவருக்கு அரசு வேலை வழங்கப் படும், அனைத்து நியமனங்களும் திட்ட மிட்டபடி முடிக்கப்படும்," என்று தெரி வித்துள்ளார்.



# ஆப்கானிஸ்தானில் அனர்த்தம்; நில அதிர்வினால் 20 பேர் பலி

ஆப்கானிஸ்தானில் நேற்று அதிகாலை ஏற்பட்ட சக்திவாய்ந்த நில அதிர்வினால் சுமார் 20 பேர் வரையில் உயிரிழந்துள்ளனர் என சர்வதேச ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

அத்துடன், சுமார் 320 பேர் காயமடைந்துள்ளனர் என அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

மேலும் பலி எண்ணிக்கை உயரக் கூடும் என அஞ்சப்படுகின்றது.

நில அதிர்வினால் பல்க் மற்றும் சமங்கான் மாகாணங்களின் சில பகுதிகள் கடுமையாகப் பாதிக்கப்பட்டுள்ளன என தலிபான் பாதுகாப்பு அமைச்சு தெரிவித்துள்ளது.

முன்னதாக கடந்த ஒகஸ்ட் 31ஆம் திகதி ஆப்கானிஸ்தானில் 6.0 ஆக பதிவான நில அதிர்வில் 2,200 பேர் உயிரிழந்திருந்தமை குறிப்பிடத்தக்கது.















# கென்யாவில் மண்சரிவு; 26 பேர் உயிரிழப்பு

கிழக்கு ஆபிரிக்க நாடான கென்யாவில் பெய்து வரும் கனமழையின் காரணமாக ஏற்பட்ட மண்சரிவில் சிக்கி குறைந்தது 26 பேர் உயிரிழந்துள்ளனர்.

மேலும், 35 இற்கும் மேற்பட்டோர் காணாமல் போயுள்ளதால், பலி எண்ணிக்கை மேலும் அதிகரிக்கக்கூடும் என அஞ்சப்படுகிறது.

கென்யாவின் ரிப்ட் வெலி மாகாணத்தில் உள்ள மரக்வெட் மாவட்டத்தில், குறிப்பாக கிழக்கு மரக்வெட் பகுதியில் உள்ள செசோங்கோச் கிராமத்தில், கனமழை காரணமாக திடீரென மண்சரிவு ஏற்பட்டது.

இந்த மண்சரிவால் குறைந்தது 26 பேர் உயிரிழந்தனர். மேலும், 25 பேர் மண்சரிவில் சிக்கி மாயமாகியுள்ளனர். சுமார் 25 பேர் பலத்த காயமடைந்துள்ளனர். இந்த மண்சரிவில் 1,000க்கும் மேற்பட்ட வீடுகள் மண்ணுக்குள் புதையுண்டுள்ளன.







# இன்றைய ராசி பலன்கள் - 04.11.2025




இன்று உங்களுக்கு சாதகமான நாள். நீங்கள் நம்பிக்கை உணர்வுடன் வெற்றியைக் கொண்டாடி மகிழ்வீர்கள். உங்கள் இனிமையான வார்த்தைகள் மூலம் பிறரை வெல்வீர்கள். இன்று முக்கிய முடிவுகள் எடுக்க உகந்த நாள்.

கடினமான பணிகளையும் எளிதில் முடிப்பீர்கள். பணியில் உங்கள் செயல்திறனுக்கு அங்கீகாரமும் பாராட்டும் பெறுவீர்கள்.

உங்கள் துணையுடன் இனிமையான தருணங்களை பகிர்ந்து மகிழ்வீர்கள். உங்கள் இனிமையான வார்த்தைகள் உங்கள் துணையை மகிழ்விக்கும். இதனால் இருவருக்கிடையிலான உறவில் நல்ல பிணைப்பு ஏற்படும்.

பணப்புழக்கம் தாராளமாக காணப்படும். உங்கள் வங்கியிருப்பு உயரக் காண்பீர்கள்.




இன்று நீங்கள் நம்பிக்கையான மன நிலை கொண்டிருப்பீர்கள். நீங்கள் உறுதியுடன் இருப்பதன் மூலம் இன்றைய நாளின் சவால்களை வெற்றி கொள்ள முடியும்.

இன்று இறுக்கமான பணிகளில் மும்மரமாக இருப்பீர்கள். பணியின்போது தவறுகள் ஏற்பட வாய்ப்புள்ளது, இது உங்களுக்கு கவலையை அளிக்கும்.

உறவில் நல்லிணக்கம் பராமரிக்க வாக்கு வாதங்களை தவிர்க்கவும்.அமைதியான சகஜமான அணுகுமுறை மூலம் இனிமையற்ற தருணங்களை தவிர்க்கலாம்.

சிறிது பண இழப்பு காணப்படுகின்றது. தேவையற்ற செலவுகளை தவிர்க்க கட்டுப்பாடுடன் செலவு செய்ய வேண்டும்.

வெந்நீர் குடிப்பதன் மூலம் சளியை தவிர்க்க இயலும்.




இன்று உங்களின் பொறுமை சோதனைக்குள்ளாகும் சூழ்நிலை ஏற்படும். நீங்கள் எளிதில் உணர்ச்சி வசப்படுவீர்கள். நீங்கள் அமைதியான அணுகுமுறை மேற்கொள்ள வேண்டும். உங்கள் இலக்குகளை அடைய கடினமாக போராட வேண்டும்.

பணியிடத்தில் பதட்டமான சூழ்நிலை காணப்படும். பணியிடச் சூழலில் காணப்படும் பதட்டமான் நிலைமை உங்களுக்கு கவலையை ஏற்படுத்தும்.

உங்கள் துணையிடம் உணரச்சிவசப்படுவீர்கள். இதனால் இருவருக்கிடையேயான உறவு பாதிக்கும். நல்ல புரிந்துணர்வுக்குச் சகஜமான அணுகுமுறை மேற்கொள்வது நல்லது.

பயணத்தின் போது பண இழப்பு காணப்படுகின்றது.




இது உங்களுக்கு சாதகமான நாள். நற்பலன்கள் கிடைக்கும் நாள். உங்கள் தொடர் முயற்சியால் இது சாத்தியம்.

வேலை தொடர்பான பயணம் காணப்படுகின்றது. இது உங்களுக்கு நன்மை பெற்றுத் தரும். வெற்றி கிடைக்கும்.

உங்கள் துணையுடன் சிறந்த உணர்வுகளை பகிர்ந்து கொள்வீர்கள். இன்றைய நாளை உங்கள் துணையுடன் நெருங்கிப் பழகி கழிப்பீர்கள்.

இன்று அதிர்ஷ்டகரமான நாள். இன்று அதிக பண வரவு காணலாம். அந்தப் பணத்தை நீங்கள் ஆன்மீக நோக்கத்திற்கு பயன்படுத்தலாம்.

இன்று உங்கள் மன உறுதி காரணமாக ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும்.




இன்று பரிசோதனைகுள்ளாகும் நாள். ஆன்மீக ஈடுபாடு உங்களுக்கு ஆறுதலை அளிக்கும். ஆன்மீக யாத்திரை உங்களுக்கு பயனளிக்கும்.

பணியிடச் சூழலில் அசௌகரியம் காணப்படும். உங்கள் பணிகளை மேற்கொள்ளும்போது கவனமுடன் இருக்க வேண்டும்.

நீங்கள் உங்கள் துணையுடன் கடுமையாக நடந்து கொள்வீர்கள். இது உறவின் நல்லிணக்கத்தை கெடுக்கும். உறவில் மகிழ்ச்சியை தக்க வைக்க அமைதியாக நடந்து கொள்ள வேண்டும்.

நிதிநிலைமை ஏமாற்றம் அளிக்கும் வகையில் இருக்கும். குடும்பத்திற்காக தேவையற்ற விஷயங்களுக்கு செலவு செய்ய நேரலாம்.

சில அசௌகரியங்கள் காரணமாக உங்கள் ஆரோக்கியம் பாதிக்கப்படும். கால் வலி ஏற்பட வாய்ப்புள்ளது.




இன்று வருத்தப்படும்படியான சில சூழ்நிலை காணப்படும். நீங்கள் எதிர்பார்த்த பலன்கள் கிடைக்காது. எளிய அணுகுமுறை மேற்கொள்வதன் மூலம் சாதகமான பலன்கள் கிடைக்கும்.

கூடுதல் பொறுப்புகள் காரணமாக பணிகளை குறித்தநேரத்தில் முடிப்பதை கடினமாக உணர்வீர்கள். விரும்பிய இலக்குகளை அடைவதற்கு திட்டமிட்டு பணியாற்ற வேண்டும்.

குடும்ப பிரச்சினை ஒன்றின் காரணமாக கருத்து வேறுபாடு ஏறபட்டு உங்கள் துணையுடன் சூடான விவாதத்தில் கலந்து கொள்வீர்கள்.இத்தகைய போக்கிற்கு இடம் கொடுக்காமல் இருக்க முயலுங்கள்.

உங்கள் குழந்தையின் ஆரோக்கியத்திற்காக பணம் செலவு செய்ய வேண்டிய கட்டாயம் காணப்படும்.




உங்கள் முயற்சியில் பொறுமையும் உறுதியும் தேவை. உங்கள் முயற்சில் வெற்றி காண உணர்ச்சி வசப்படாமல் இருக்க வேண்டும். உங்கள் பணிகளை திட்டமிட்டு நடத்த வேண்டும்.

இன்று கூடுதல் பணிகள் காணப்படும். சக ஊழியர்களின் கடுமையான நிலைப்பாட்டின் காரணமாக நீங்கள் உணர்ச்சிவசப்பட நேரலாம்.

நீங்கள் குழப்பமான உணர்வுகளை உங்கள் துணையிடம் வெளிப்படுத்துவீர்கள். நீங்கள் இதனை தவிர்த்து அமைதியுடனும் கட்டுப்பாட்டுடனும் இருக்க வேண்டும்.

பணப்புழக்கம் இன்று சுமூகமாக இருக்காது. தேவையற்ற செலவுகள் செய்வீர்கள். இது உங்களுக்கு கவலையை ஏற்படுத்தும்.




சுய வளர்ச்சிக்கான முயற்சிகளுக்கு இன்று சாதகமான நாள். உங்கள் மன உறுதி மூலம் இன்று உங்கள் விருப்பங்களை பூர்த்தி செய்து கொள்வீர்கள். நீங்கள் எடுக்கும் முயற்சிகள் நல்ல பலனளிக்கும்.

பணியில் உங்கள் செயல்திறன் உங்களுக்கு திருப்திகரமாக இருக்கலாம். குறித்தநேரத்தில் பணிகளை முடிப்பதற்கான சாத்தியம் உள்ளது.

உங்கள் துணையுடன் நல்ல புரிந்துணர்வை பராமரிப்பீர்கள். உங்கள் துணையின் விருப்பப்படி நடந்து கொள்ள நேரலாம்.

இன்று பண வரவு அதிகமாக காணப்படும். பணத்தை சிறப்பாக சேமிப்பீர்கள். இதனால் மகிழ்ச்சியாக இருப்பீர்கள்.

# இன்றைய ராசி பலன்கள் - 04.11.2025




இன்றைய நிகழ்வுகளில் நீங்கள் நடைமுறை அணுகுமுறையை மேற்கொள்ள வேண்டும். உணர்ச்சி வசப்படுவதை தவிர்க்க வேண்டும். எதிர்மறை எண்ணங்கள் உங்களை பாதிக்காமல் பார்த்துக் கொள்ளுங்கள். இன்று அமைதியாக இருங்கள்.

பணியிடச் சூழல் மகிழ்சிகரமாக இருக்காது. சக பணியாளர்களுடன் மோதல் ஏற்பட வாய்ப்புள்ளதால் நீங்கள் கவனமாக இருக்க வேண்டும்.

உங்கள் துணையுடன் மனம் திறந்து பேசுங்கள். உங்கள் உணர்வுகளை ஒளிவு மறைவு இன்றி வெளிப் படுத்துவதன் மூலம் நல்லுறவு வளரும்.

இன்று கூடுதல் செலவுகள் காணப்படும். உங்கள் தேவைகளை பூர்த்தி செய்துகொள்ள நீங்கள் சிறிய அளவில் கடன் வாங்குவீர்கள்.




இன்று அர்த்தமுள்ள நாளாக இருக்காது. உங்கள் முயற்சிகள் வெற்றியை அளிக்காது. நீங்கள் அமைதியாகவும் நட்பான அணுகுமுறையுடனும் இருக்க வேண்டும். ஆன்மீக ஈடுபாடு ஆறுதலை பெற்றுத் தரும்.

பணியிடச் சூழல் சாதகமான பலன்களை அளிக்காது. பணிச்சுமை அதிகமாக காணப்படும்.

உங்களின் கடுமையான போக்கு காரணமாக உங்கள் துணையுடன் மகிழ்ச்சியை தக்க வைத்துக் கொள்வது கடினம். சகஜமான அணுகுமுறையால் நன்மை விளையும்.

இன்று நிதிநிலைமை மகிழ்ச்சிகரமாக இருக்காது. இன்று கூடுதல் செலவுகள் செய்ய நேரலாம்.

பதட்டம் காரணமாக கால் வலி மற்றும் முதுகில் விறைப்பு ஏற்பட வாய்ப்புள்ளது.




இன்று சில வலுவற்ற சூழ்நிலை காணப்படும். திட்டமிட்டு முயற்சி செய்தால் நல்ல பலன் கிடைக்கும். பிரார்த்தனை மற்றும் மந்திரங்கள் மூலம் நற்பயன் பெறலாம்.

பணியிடத்தில் நற்பலன்கள் காண உங்கள் பணியில் ஒழுங்கு முறையான அணுகுமுறை வேண்டும்.

குடும்ப பிரச்சினை ஒன்றின் காரணமாக உங்கள் துணையுடன் தவறான புரிந்துணர்வு ஏற்பட வாய்ப்புள்ளது. இது உங்களுக்கு கவலையை ஏற்படுத்தும். உங்கள் துணையுடன் நட்பான அணுகுமுறை மேற்கொள்வது சிறந்தது.

இன்று தேவையற்ற செலவுகள் காணப்படும். இதனால் சிறிது வருத்தம் உங்களிடம் காணப்படும்.




உங்களை மேம்படுத்திக் கொள்ள இன்றைய நாளை நீங்கள் பயன்படுத்திக் கொள்ளலாம். உங்களின் இனிமையான தொடர்பின் மூலம் சாதகமான பலன்கள் சாத்தியம். இன்று உங்களுக்கு சிறப்பான நாள்.

பணியிடத்தில் உங்கள் செயல்திறன் சாதகமான பலன்களை அளிக்கும். பணி சம்பந்தமான பயணம் காணப்படுகின்றது.

உங்கள் துணையுடன் மகிழ்ச்சியான தருணங்களை பகிர்ந்து கொள்வீர்கள். உங்கள் இனிமையான வார்த்தைகளால் உங்கள் துணை மகிழ்ச்சியுறுவார். இதனால் இருவரிடையே நல்ல புரிந்துணர்வு ஏற்படும்.

பணப்புழக்கம் அதிக அளவில் காணப்படும். உங்கள் தேவைகள் சமாளிக்க நீங்கள் சிறிய அளவில் கடன் வாங்குவீர்கள்.

# உடையார்கட்டில் துப்பாக்கியுடன் குடும்பஸ்தர் கைது





(பா.சதீசன்)

சட்டவிரோத துப்பாக்கி வைத்திருந்த குற்றச்சாட்டில் குடும்பஸ்தர் ஒருவர் நேற்று முன்தினம் மாலை உடையார்கட்டு பகுதியில் கைது செய்யப்பட்ட சம்பவம் ஒன்று இடம்பெற்றுள்ளது.

புதுக்குடியிருப்பு பொலிஸ் விசேட பிரிவினருக்கு கிடைக்கபெற்ற இரகசியத் தகவலையடுத்து சம்பவ இடத்திற்கு சென்ற புதுக்குடியிருப்பு பொலிஸார் சட்டவிரோத இடியன் துப்பாக்கியை உடஜ்மையில் வைத்திருந்த குடும்பஸ்தரைக் கைது செய்துள்ளனர்.

இருட்டுமடுப் பகுதியில் வசிக்கும் 46 வயதுடைய குடும்பஸ்தரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார்.

சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை புதுக்குடியிருப்பு பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். கைது செய்யப்பட்டவர் விசாரணைகளின் பின்னர் முல்லைத்தீவு நீதிமன்றத்தில் முற்படுத்தப்படவுள்ளார் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.